# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, சித்திரை 1உ (14-4-74) ஞாயிறு ஏப்ரல் 14 ரபி:அவ் 20 - புத்தகம் 27 இதழ்-33


## காட்டிக்கொடுப்பவனுக்கு வெகுமதி ரூபா 2000-00

தற்போது வடபகுதிப் பொலிசாரால் தேடப்பட்டு வரும் சிவகுமார் என்ற தமிழ் இளைஞனை — பொலிசாருக்கு யாராவது காட்டிக்கொடுத்தால் — அல்லது தகவல் கொடுத்தால்—அவர்களுக்கு ரூபா இரண்டாயிரம் பொலிசாரால் வெகுமதியாகத் தரப்படுமாம்!

இந்த இளைஞனைத்தேடி அண்மையில் 200க்கு மேற்பட்ட ஆயுதம் தாங்கிய பொலிசார் உரும்பராய் கிராமத்தை நடுநிசியில் முற்றுகையிட்டு வீடு வீடாகத் தேடுதல் நடத்தியது தெரிந்ததே!

# சிங்களக் கலாசாரத்தைத் தமிழர்களிடம் திணிக்கிறது திரைப்படக் கூட்டுத்தாபனம்!

## தமிழில் 'டப்' செய்த சிங்களப் படத்தையே புத்தாண்டுக்குத் தமிழர் பார்க்க வேண்டுமாம்!

திரைப்படங்களின் மூலம் தமிழர்கள் மீது சிங்கள கலாசாரத்தைத் திணிக்கும் முயற்சியில் திரைப்படக் கூட்டுத்தாபனம் இப்போது இறங்கியுள்ளது.

புத்தாண்டுக்கு பொழுது போக்குவதற்காக தமிழ் மக்கள் புதிய தமிழ்ப்படங்கள் எதையும் பார்க்க முடியாது. சிங்களப்படமொன்றையே தமிழில் 'டப்' செய்து யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு கொழும்பு போன்ற இடங்களில் திரையிட்டுள்ளது திரைப்படக் கூட்டுத்தாபனம்!

இதன் மூலம் தமிழ் மக்களின் பொழுதுபோக்கு உரிமையும் மறுக்கப்பட்டு சிங்களக் கலாசாரம் திணிக்கப் படுகிறது தமிழ் மக்கள் வேறு வழியின்றி சிங்களப் படத்தையே பார்க்க வேண்டிய நிலையை சிருட்டிக்க முயலுகிறது திரைப்படக் கூட்டுத்தாபனம்!

தமிழ் மக்களின் உரிமைக்கு உலைவைத்து—அவர்கள் மீது திரைப்பட மூலம் சிங்கள கலாசாரத்தை திணிக்கும் கூட்டுத்தாபனத்தின் திட்டமிட்ட சதியை தமிழ் மக்கள் முறியடித்திடவேண்டும் என்றும் தமிழில் "டப்" செய்யப்பட்ட சிங்களப்படங்களை தமிழர்கள் அனைவரும் புறக்கணிப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக சரியான அடி கொடுக்கவேண்டுமென்றும் துடிப்புமிக்க தமிழ் இளைஞர்கள் கருதுகிறார்கள்.

தமிழ்ப் புத்தாண்டை யொட்டி ஒவ்வொருதடவையும் போட்டி போட்டுக் கொண்டு பல தமிழ்த்திரைப் படங்கள் திரையிடப்படுவது வழக்கம். ஆனால் இந்த முறை ஏற்கெனவே ஓடிக்கொண்டிருந்த தமிழ்ப் படங்களை நிறுத்திவிட்டு, தமிழில் டப் செய்யப்பட்ட சிங்களத் திரைப்படமொன்றையேபுத்தாண்டையொட்டி திரையிடும்படி கட்டளையிட்டுள்ளது திரைப்படக் கூட்டுத்தாபனம்.

தமிழ்ப் படங்களை—அவை இந்தியப் படங்கள் என்று

(5-ம் பக்கம் பார்க்க)

## மத்துகமையிலும் தமிழர் காணி பறிமுதல்!

மத்துகமைப் பகுதியில் வசித்துவரும் இலங்கைப் பிரஜாவுரிமையுள்ள மூன்று தமிழ்க்குடும்பங்களின் காணிகள் அரசாங்க அதிகாரியினால் பறிக்கப்பட்டு சிங்கள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆர். ஏ. சொக்கன், ஆர். ஏ. குப்பன், எம். அண்ணாமலை ஆகிய தமிழர்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்கள். இவர்கள் கடந்த 24 வருடங்களாக இந்நிலத்தில் விவசாயம் செய்துவந்திருக்கின்றனர். இதுபற்றி ஆளுங்கட்சி ஆதரவு தொழிற்சங்கமான ஜ. தொ. கா. வே அரசிடம் புகார் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவிலும் உயர்நீதிமன்றம் கூடும்!

### செல்லத்தம்பு எழுப்பிய எதிர்ப்புக்குரல் வெற்றி!

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களின் வழக்குகளை தமிழில் விசாரிக்க வவுனியாவில் உயர் நீதிமன்றம் கூடும் என்ற நீதியமைச்சரின் வாக்குறுதி என்னாயிற்று? என்று தேசியபேரவையில்

(5-ம் பக்கம் பார்க்க)

## வேலையில்லாப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழ் தோட்டத் தொழிலாளர்களே!

### மலைநாட்டுத் தமிழரின் பரிதாப நிலைபற்றி சோவியத் ஏடு படப்பிடிப்பு!

மாஸ்கோவிலிருந்து வெளியாகும் 'நியூடைம்ஸ்' எனும் வார சஞ்சிகையின் (மார்ச்சு இதழ் 1974, இலக்கம் 11), Ilya Suchkov எனும் கட்டுரையாளர், 'Sri Lanka, Land of Tea' என்ற தலைப்பின் கீழ் வரைந்துள்ள கட்டுரையில், நம் மலையகத் தொழிலாளச் சகோதர சகோதரிகள் படும் அல்லல்கள் சற்றே விவரிக்கப்பட்டுள்ளன. கட்டுரையாளர் இந்நாட்டுக்கு வந்து இங்குள்ள சூழ்நிலைகளைக் கண்ட பின்னரே கட்டுரையை வரைந்துள்ளார்.

அக்கட்டுரையில் இடம் பெற்றிருந்த சிலபகுதிகளின் தமிழாக்கம் வருமாறு:—

......"சூரியக் கதிர்களால் நிரம்பி அலை போன்று தெளிந்து செல்லும் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள, தோட்டமொன்றை நோக்கி நாம் நகருகையில், பச்சைத் தேயிலைத் துளிர்களால் நிரம்பியுள்ள ஆழமான கூடைகளைச் சுமந்து கொண்டு, பாதையோரத்தால் நடந்து சென்ற ஏறக்குறைய ஐம்பது பெண்களைக் கடந்தோம். ஒரு நாளைக்கு மூப்பது இறாத்தல் தேயிலை பறிக்க வேண்டுமென்பது தான், பறிப்பவரின் பங்கு. இதற்கு அவளுக்கு இரண்டரை ரூபாய்கள் கிடைக்கின்றன? அவள் அதிகம் பறிப்பாளாயின், ஒவ்வொரு அதிகப்படியான இறாத்தலுக்கும் ஐந்து சதம் எனும் அளவில் பணம் வழங்கப்படுகிறது. நாள் வேலையானது, காலை ஏழரை மணிக்குத் தொடங்கி, மதிய உணவானது — இடையே சமபோசனமாக அவசரத்தில் முடிக்கப்பட்டபின், மாலை ஐந்து மணிக்கு முடிகிறது; தேயிலை பறிப்பவர்

(5-ம் பக்கம் பார்க்க)

## அண்ணாவும் கருணாநிதியுமே காரணமாம்!

நான்காவது உலகத் தமிழ் மாநாட்டுத்திரைப்படத்தை திரையிடக் கூடாது என்று அரசு தடை விதித்திருப்பதற்கு காரணம் என்ன?

தடைசெய்ததற்கு தகுந்த காரணம் எதையும் கூற முடியாத தணிக்கை சபையினர் இப்போது விழிபிதுங்குவதாக அறியப்படுகிறது.

இதே வேளையில் சர்வதேச பத்திரிகை நிறுவனத்தின் நிருபர் ஒருவர் தணிக்கை சபையினருடன் தொடர்பு கொண்டு இதுபற்றி கேட்டபோது குறித்த திரைப்படத்தில் அறிஞர் அண்ணா, கருணாநிதி ஆகியோர் மிதமிஞ்சி வருவதாகவும் அதனாலேயே அதை அனுமதிக்க முடியவில்லையென்றும் கூறப்பட்டதாம்!

இதற்கிடையில் தமிழாராய்ச்சி மாநாட்டுத் திரைப்படம் தடைசெய்யப்படுவதற்கு தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் உறுப்பினரும் அரசாங்க ஆதரவாளருமான ஒருவரே தூண்டுகோலாக இருந்ததாகவும் பேசப்படுகிறது.

## 300 தமிழர்களுக்கு வெளியேற்ற உத்தரவு!

'அதிக உணவு பயிரிடுக' என்று ஆட்சியாளர் ஒருபுறத்தில் கூறி வருகிறார்கள். மறுபுறத்தில் உணவுற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் உண்மை உழைப்பாளிகளான தமிழர்களை அவர்கள் விவசாயம் செய்யும் நிலங்களிலிருந்து துரத்துகிறார்கள்.

வவுனியாவில் செட்டிகுளம் பகுதியில் கடந்த 26 வருடங்களாக காடுகளை வெட்டி உணவுப் பயிர் செய்து வரும் சுமார் 300 தமிழ்க்குடும்பங்களுக்கு அவர்கள் தற்போது விவசாயம் செய்துவரும் காணிகளை விட்டு 14 நாட்களுக்குள் வெளியேறும்படி திடீரென்று உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தகவலை இ. தொ. கா. வவுனியா மாவட்ட பிரதிநிதி சே. வி. முத்துராமலிங்கம் தெரிவித்துள்ளார்.

## பண்டிதரின் கிளர்ச்சியால் வடக்கில் சம அந்தஸ்து!

### ஏனைய இடங்களில் இ. போ. ச. நிலை என்ன?

நாவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களின் தொடர்ச்சியான கிளர்ச்சினால் வட மாகாணத்தில் ஓடும் இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப் பலகைகளில் தமிழுக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து கிடைக்கவிருக்கிறது. வடக்கே மட்டும் தான் சம அந்தஸ்தா? கிழக்கு மாகாணத்தின் நிலையென்ன? கிழக்கு மாகாணத்திலும் இ. போ. ச. சேரிடப் பலகைகளில் தமிழுக்கு சம அந்தஸ்து தரப்படவேண்டும் என்று மட்டு நகர் பா. உ. திரு. செ. இராசதுரை போக்குவரத்து அமைச்சரிடம் கோரியுள்ளார்.

இ. போ. ச. பேருந்துகளின் சேரிடப் பலகைகளில் சிங்களத்தில் பெரியதாகவும், தமிழில் சிறிதாகவும் எழுதப்படுவதற்கு இ. போ. ச. அதிகாரிகள் உத்தரவு எதுவும் இடவில்லையென்

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# 'சிங்களம் மட்டும்' சட்டத்தின் மூலவர் ஜே. ஆரே!

## பத்தாண்டுகளாக தமிழுக்கு இருந்து வந்த உரிமையைப் பறித்தது யூ. என். பி!

## தமிழ்ப்பகுதிகளில் கிளைகள் அமைக்கு முன் தமிழர் கேள்விகளுக்கு 'விடை தருவார்களா?

1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணி அதிகாரபீடமேறியதும்—தமிழ்ப் பகுதியில் புற்றீசல் போல சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் என்று கூறிக்கொண்டு சுயநலத்தரகர்கள் பலர் ஆங்காங்கே திடீரென்று புறப்பட்டு, தமிழ் சமுதாயத்தில் பிளவு ஏற்படுத்தி தமிழினத்தைக்காட்டிக்கொடுத்துவருகின்றனர். இப்போது—அடுத்த தேர்தலில் யூ. என். பி. ஆட்சி பீடமேறக்கூடும்; அச்சமயத்தில் சுரண்டுவ்தற்கு வசதியாக இருக்கும் என்ற நப்பாசையில் யூ. என். பி. கிளை அமைப்பதாகக் கூறிக் கொண்டு புதிய சில தரகர்கள் புறப்பட்டிருக்கின்றனர். ம. எஸ்., டட்லி சேனநாயகா ஆகியோரின் படங்களைத் தாங்கிய பச்சைநிற கடிதத் தாள்களுடன் புதிய யூ. என். பித் தரகர்கள் புறப்பட்டிருக்கிறார்கள். இந்த யூ. என். பீத் தரகர்களினதும், இளைஞர்களினதும் உள்ளங்களைத் திறப்பதற்காக 'ஈழநாடு' 29-3-74 இதழில் அதன் அரசியல் நிருபர் தீட்டியுள்ள கட்டுரையொன்றை இங்கு வெளியிட்டுள்ளோம்.

—ஆசிரியர்.

யாழ்ப்பாணத்திலே பல ஊர்களிலும் ஐக்கியதேசியக் கட்சியினர் புதிய கிளைகளைத் திறக்க ஏற்பாடுசெய்து வருகிறார்கள். ஓர் ஊரில் கிளையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது: மன்னார் உபதேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கையை எடுக்கும் புதிய தைரியமும் நம்பிக்கையும் ஐ: தே கட்சிக்கு ஏற்பட்டுள்ளது போலும்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு, எந்தக் கட்சிக்கிளையையும் எங்கும் ஆரம்பிக்க யாருக்கும் உரிமையுண்டு. கிளை ஆரம்பிக்கக்கூடாதென்று தடைசெய்வதற்கில்லை; ஆனால் சென்ற பல வருடங்களாக ஏன் வட பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி செயல்படவில்லை; அக்கட்சியில் ஏற்கெனவே இருந்துவந்த தமிழ்த் தலைவர்கள் அதிலிருந்து ஏன் வெளியேறினர்! காரணம் என்ன? அது நீங்கியதா? ஐ. தே. கட்சித் தலைவர்களுக்கு மனமாற்றம் ஏற்பட்டுள்ளதா? என்று பல முக்கிய கேள்விகள் எழுகின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை கவனிக்கவேண்டும். அன்றுபிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்தபோது இங்கு அரசாங்க மொழி ஆங்கிலமாக இருந்து வந்தது. அதை மாற்றி, சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாகச் செய்யப்படுவது பற்றி ஒரு விசேஷ கமிட்டி நியமிக்கப்பெற்றது; அதற்கு இப்போதைய ஐ. தே. கட்சித் தலைவரான ஜே. ஆர்; ஜயவர்த்தன தலைவராக இருந்தார்; முதல் கூட்டத்தில் சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாகச்செய்யும் கருத்துடன் ஜே. ஆர். ஒரு சாட்சியை சில கேள்விகள் கேட்டார்; அதை திரு. எஸ். நடேசபிள்ளை பலமாக ஆட்சேபித்து அச்சபைக் கூட்டத்திலிருந்து வெளியேறினார்.

பின்னர் அச்சபை விசாரணை இரு மொழிகளும் இருக்கும் முறையிலேயே நடைபெற்ற அறிக்கையும் அவ்விதமே வெளியிடப்பட்டது. பின்னர் அரசாங்க சபையில் இவ்விதத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. திரு: ஜே. ஆர். அதற்குக் கொண்டு வந்த ஒரு திருத்தத்தில் சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார். சபையில் பலத்த ஆட்சேபம் எழுந்தது; பெரிய சேனநாயக, இருமொழிகளும் இருக்கவேண்டுமென்ற கூறியதின் மீது, அவ்விதமே தீர்மானம் நிறைவேறியது.

அதுடன் அரசாங்க மொழிகள் திணைக்களம் ஏற்படுத்தப்பட்டு பத்து ஆண்டுகளுக்குமேல் இம்முறை அமுல் நடத்தப்பட்டு வந்தது.

இதை இங்கு எடுத்துக்கூற வேண்டிய அவசியம் உண்டு. ஏனெனில் சுமார் முப்பது வருடங்களுக்கு முன் நடந்த இவ்விஷயம் இந்தத் தலைமுறையில் பலருக்குத் தெரியாதிருக்கலாம். ஏற்கெனவே தமிழும் ஓர் அரசாங்க மொழியாக ஒப்புக்கொள்ளப்பட்டு பத்துவருடங்களுக்குமேல் அமுலில் இருந்ததை அறிந்தால், தமிழர் புதிதாக எந்த உரிமையையும் கேட்கவில்லை என்பதையும் ஏற்கெனவே இருந்த உரிமையைத்தான் மீண்டும் கிடைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள் என்பதும் விளங்கும்.

ஏற்கெனவே இலங்கையில் தமிழ் ஓர் அரசாங்கமொழியாக இருந்த உண்மை சிங்கள வாலிபர்களுக்கு மட்டுமல்ல, தமிழ் வாலிபர்களில் பலருக்கும் தெரியாது. அது தெரியுமாயின் மொழி விஷயமாக ஐ. தே. கட்சி செய்துவிட்ட ஓர் இமாலயத்தவறு உணரவும், அந்த அநீதி நீக்கப்படவேண்டியது எவ்வளவு அவசியமென்பதையும் உணரலாம்.

இலங்கைக்கு சுதந்திரம் அளிக்குமுன் இங்குள்ள சிறுபான்மை சமுகமான தமிழரின் மொழிக்கு சமஉரிமை அளிக்கப்பட்டிருந்தது.

தமிழ்மொழியும் ஓர் அரசாங்க மொழியாக இருக்குமெனத் தீர்மானித்து விட்டு நாட்டுக்கு சுதந்திரங் கிடைத்த பின் பெரும்பான்மை வாக்குகளால் அந்த உரிமையை ஒருதலைப்பட்சமாகப் பறித்ததில் ஐ. தே. கட்சிக்கு சிறப்பாக இன்று அக்கட்சியின் தலைவராக இருக்கும் ஜே; ஆருக்கும் அதிக பங்குண்டு.

களனியில் நடைபெற்ற ஐ. தே. கட்சி மகாநாட்டில் சிங்களம் மட்டும் தீர்மானத்தை நிறைவேற்றியதும் அக்கட்சியிலிருந்து அமரர் நடேசபிள்ளை முதலியவர்கள் வெளியேறினர்

தங்கள் மொழிஉரிமையை இவ்விதம் பறித்தபின் அக்கட்சியில் தாங்கள் இருப்பது தன்மானமல்ல என்று அவர்கள் அறிவித்தனர் அச்சமயம் நடேசபிள்ளை அவர்கள் பார்லிமெண்ட் சபையில் செய்த பிரசங்கத்தைக் கேட்டு அரசியலிலிருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருந்த டட்லி அவர்கள் பெரிதும் வருந்தினார். என்றாலும் அவர் மீண்டும் அதிகாரத்துக்கு வந்ததும் அந்த அநீதியை நீக்கும் நேர்மையும் துணிச்சலும் அவருக்கு இருக்கவில்லை.

ஐ. தே. கட்சியிலிருந்து விலகி சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டாரநாயகா அமைத்தபோது இருமொழிகளும் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டுமென்ற அதனடிப்படை நோக்கத்தில் குறிப்பிட்டிருந்தார். ஐ தே. கட்சி சிங்களம் மட்டும் தீர்மானத்தை நிறைவேற்றியதும்சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் அதே தீர்மானத்தை நிறைவேற்றி தமிழை நியாயமான அளவு உபயோகிக்க இடம் அளிக்கவாமென்று குறிப்பிட்டிருந்தது.

இத்தீர்மானம் கட்சியின் அடிப்படை நோக்கத்திற்கு மாறுபட்டதால் அதிலிருந்தும் பல தமிழ்த் தலைவர்கள் வெளியேறினர்.

ஆகவே தமிழர்களுக்கு மொழி விசயமாக இவ்விரு கட்சிகளும் நம்பிக்கை மோசம் செய்துவிட்டதாகக் கருதியே அவர்கள் அவ்விருகட்சிகளிலிருந்தும் விலக நேரிட்டது. தமிழரின் ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியம் தேவை என்பதை இவ்விரு கட்சிகளும் இப்போது உணர்ந்துள்ளனவாயின் தமிழர்களுக்கு மொழி விசயமாகச் செய்துவிட்ட பெருந்தவறை நீக்க அவை முன்வரவேண்டியது அவசியமாகும்;

தமிழ் மொழி விஷயமாக ஐ. தே; கட்சித் தலைவரான ஜே; ஆர்; அவர்களின் மனம் சிறிதாவது மாறியுள்ளதா? அல்லது பழையகதையை எல்லாரும் மறந்திருப்பர் என்று நினைத்து அதைப்பூசி மெழுகிவிடப்பார்க்கிறாரா? அப்படி இல்லை எனின் அவர் சில கேள்விகளுக்குத் தெளிவானபதில் அளிக்கக்கடமைப் பட்டிருக்கிறார்.

1: தமிழ் மொழிக்கு ஏற்கெனவே இருந்த மொழி உரிமையை ஐ. தே. கட்சியின் களனி மகாநாடு ஏன் பறிக்க முன்வந்தது? காரணமென்ன? அது நம்பிக்கைத் துரோகமல்லவா?

2: அத்தீர்மானம் நிறைவேறியபின் தமிழர் அதிலிருந்து வெளியேறியது உண்மைதானா?

3: வடமாகாணத்தில் ஐ. தே. கட்சி கிளைகளை அமைக்க முற்படுமுன் அக்கட்சியினர் தமிழ் மொழி விஷயமாகச் செய்யப்பட்ட பெரிய அநீதியைத் திருத்த முன்வருவார்களா?

4. சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் வேறுஎன்னவேற்றுமைகள் இருப்பினும் மொழி விஷயத்தில் அக்கட்சியுடன் சேர்ந்தே ஐ. தே. கட்சி வாக்குச் செய்துவந்துள்ளது தமிழருக்குச்செய்துவிட்ட அநீதியைநீக்கி நாட்டில் சமூக ஒற்றுமை ஏற்படுத்த ஐ. தே. கட்சி என்ன செய்யப் போகிறது?

தேசிய ஒருமைப்பாடு ஏற்படுத்த சில தலைவர்கள் ஜே. ஆர். அவர்களை அணுகிய போது, இவ்விஷயமாகத் திட்டமான பதில் அளிக்காமல் அவர் மழுப்பி விட்டதாகத் தெரிகிறது.

தேர்தல்வெற்றிக்காக அரசியல் தவறுகள் செய்வது யாருக்கும் சகஜம், ஆனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பெரும ஆபத்தை உணர்ந்த பின்னராவது, அத்தவறைத் திருத்திக்கொள்ள எல்லா நடவடிக்கையும் எடுப்பதே அரசியல் ஞானமும் தேசாபிமானமுமாகும்.''

---

## செத்து விடு!

- தாமரைத்தீவான் -

செத்தான் மறத்தமிழன்! சிவலோகம் சென்றிட்டான்!
மெத்த வருத்தம் இது! மிகுந்த மனத்துயரம்!
இத்தரையில் தமிழனாய் இருந்தால் இனி யாரும்
கத்துங்கள், நன்றாகக் கதறுங்கள், கூவுங்கள்!

ஆறுத்துயரம் இது! அடி நெஞ்சம் உள்ளவரை
மாறாத்துயரம் இது! மாதத்தமிழான் கட்டளையை
மீறிருந்த அவன், மீறியதுமல்லாமல்
வேறுயும் போய் விட்டான்! விந்தையிலும் விந்தை இதே!

தானாகச்சாவானைத் தடுக்கமுடியாதா?
மானாக வாழ்ந்ததெலாம் மறைந்த பழங்கதையா?
தேனாம் தமிழுக்காய்ச் செத்ததுவும் பொய்தானோ?
ஏனுமிவனிப்போ இக்கோலம் கொண்டானோ?

நீயேன் இருக்கின்றாய்? நெடுநாள் இருந்த தமிழ்த்
தாயே நீ செத்துவிடு! தடைபோடயாருமில்லை!
நாயாகப் பெற்றாலும் நன்றி இருந்திருக்கும்!
பேயாந் தமிழர்களைப் பெற்றாயே!

நகலே அசலாக நம்பும் பிறவிகளும்,
பகலை இரவாகப் பாவிக்கும் கூகைகளும்,
முகங்காட்டி நெஞ்சத்தை மூடும் கொடியனவும்,
அகலும் நாள் உண்டேல் அதுதான் முயற்கொம்பு!

நிழலை உருவாய் நினைக்கும் உருவங்கள்,
தழலைப் பழமென்று தாவுகின்ற விட்டில்கள்,
விழலில் பெரும் பயனை விரும்பும் சடலங்கள்,
உழலும் திருநாட்டில் உண்மைக்கிடமேது?

நன்றி மறப்பதுவும், நல்லதெலாம் மாய்த்துக்
கொன்று குவிப்பதுவும், கொள்கையெனில்! அவ்வாறே
வென்று நிலைக்கட்டும்! விளையட்டும் பேரின்பம்!
ஒன்றும் தடையில்லை! உண்மையே நீ ஓடு!

காலம்தான் ஓர் முடிவைக் காட்டும்! அதுமட்டும்
ஓலம் இடுதற்கும் ஒருதமிழன் கிடையாது!
கோலமாம் கோவமிதைக் கொண்டே அறப்பட்டு
ஞாலமே நீயும் இனி நடைபோடு, நடைபோடு!

---

## சித்திரையாளே சினத்தைக் கிளப்பாதே 'போடி! போபோ'

சித்திரையாளே
என்னுடைய
சினத்தைக் கிளப்பாதே!
போடி போ!
செத்துமடிகிறோம்
நாங்களிங்கு!
சிரிப்பென்ன கிரிப்பு
உனக்கு!
எமக்கு—
எத்தனையோ தொல்லைகள்
இங்கே இருக்கிறது!
சித்திரை வருடச்
சிறப்பெதற்கு?
போடி போ போ!
உண்ண உணவில்லை!
உடுக்கத் துணியில்லை!
எங்கள் இதயம்
எண்ணுகின்ற
அன்னை தமிழ்மொழியில்
பேச, எழுத
பாட முடியவில்லை!
பட்டு உடுத்தி
பலகாரம் சுட்டு
பன்னீர் தெளித்து
உன்னை வரவேற்க
நாங்கள் தயாரில்லை!
போ!
வால்பிடித்துக் கால்நக்கி
கூலிக்கு மாரடிக்கும்
கூட்டத்தைப்
போய்ப்பார்!
அவர்கள் எறியும்
எச்சில் இலையும், எலும்பும்
நிறையக் கிடைக்கும்!
நில்லாதே போடி!

—சி. குணரத்தினம்.

# பாரீஸ் எழுந்த தமிழோசை




சிவ பூசையில் கரடியா? அது மாநாட்டின் இறுதி நாளான சனவரி 10ம் நாள் அன்றோ புகுந்தது? முதலாவது நாளே அப்படி என்ன "கரடி" புகுந்தது? என்று கேட்டு ஒரு கிழமையாக என் அருமை வாசகர்கள் தங்கள் மூளையைக் குடைந்து கொண்டிருப்பார்கள்!

நான் சொல்வது உண்மை தான்! முதலாவது நாள் மாநாட்டுத் தொடக்கவிழா நிகழ்ச்சிகள் முடிவடைந்ததும் தலையைச் சுற்றி பச்சை நிற 'மப்ளர்' அணிந்திருந்த ஒரு 'கிழட்டுக் கரடி' கட்டுக் கட்டாக கையில் சில பிரசுரங்களுடன் மேடையை நோக்கி வேகமுடன் நடந்து வந்தது!

நான் குறிப்பிடும் இந்தக் "கிழட்டுக் கரடி" அடங்காத் தமிழரான திரு. சி. சுந்தரலிங்கம் அவர்களே!

மேடையை நோக்கி மிடுக்குடன் நடந்து வந்த சுந்தரலிங்கத்தார், தனக்கேயுரிய குரலில் சத்தமிட்டு பேசியபடியே மாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளிடம் அச்சிடப்பட்ட ஒரு பிரசுரத்தை மளமளவென்று விநியோகிக்கத் தொடங்கினர்!

அவரை யாரால் கட்டுப்படுத்த முடியும்? தடுத்து நிறுத்த முடியும்? அவர்தான் யாருக்கும் அடங்காத் தமிழர் ஆயிற்றே!

அவர் கொடுக்கும்பிரசுரம் தான் என்ன—அதில் அப்படி என்ன எழுதப்பட்டிருக்கிறது? ஏதாவது அரசியல் சம்பந்தப்பட்டதாக இருக்குமோ?

"தமிழ் ஈழம்" தனிநாடாக இருக்கவேண்டியதன் அவசியத்தை விளக்கும் பிரசுரங்களைத்தான் விநியோகிக்கிறரோ!

அப்படியானல்— அரசியல் கலப்பற்று நடைபெறும் தமிழ் மாநாட்டில் அரசியல் பிரச்சினைகள் தலைதூக்க இடமளித்திடலாமோ!

—இப்படியான பல கேள்விகள் அங்கிருந்த மாநாட்டுக் குழுவினரையும் மற்றவர்களையும் சிறிது நேரம் சஞ்சலத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை! எங்கும் ஒரு வித பரபரப்பு அப்போது நிலவியது!!

ஆனல் சுந்தரலிங்கத்தார் அவ்வளவு தூரம் பண்பாடு தெரியாதவராக இருக்கவில்லை!

ஆராய்ச்சி மாநாட்டுக்கும் அரசியல் பிரச்சினைகளுக்குமுள்ள வேறுபாடுகளை அறிந்தவர் அவர்!

திரு. சுந்தரலிங்கம் அங்கு விநியோகித்த கட்டுரை முற்றிலும் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாகவே அமைந்திருந்தது!

மாநாட்டில் வாசிக்கப்படும் கட்டுரைகள், ஏற்கெனவே கல்வி ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அக் குழுவினல் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே மாநாட்டின் போது பின்பற்றப்பட்ட மரபு ஆகும்!

அவ்வாறு மாநாட்டில் படிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் அன்று (3-1-74) பிற்பகலிலிருந்தே வாசிக்கப்படவிருந்தன.

ஆனல் முன்னுள் பேராசிரியர் சுந்தரலிங்கத்தாரோ தனது ஆராய்ச்சிக் கட்டுரையை எந்தவொரு கல்வி ஆய்வுக் குழுவுக்கும் அனுப்பவில்லை!

இன்றையபல பேராசிரியர்களுக்கெல்லாம் பேராசிரியராக இருந்தவர் அல்லவா அவர்!

எல்லா ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கும் முன்பு தனது ஆராய்ச்சிக் கட்டுரையை மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளிடம் விநியோகித்தும் விட்டார்!

ஆம், மாநாட்டுக் கல்வி ஆய்வுக் குழுவினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாநாட்டுக்கருத்தரங்கில் படிக்கப்படாவிட்டாலும் மாநாட்டு அரங்கில்வைத்து வெளியிடப்பட்ட முதலாவது ஆராய்ச்சிக் கட்டுரை முன்னுள் பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களுடையதே என்றுகூறுவதில் தவறு இல்லை!

திரு: சுந்தரலிங்கம் தமது ஆராய்ச்சிக் கட்டுரையில், ஈழம் தமிழர்களுக்கே ஆதி முதல் சொந்தமானது என்பதை நிரூபிக்க முயன்றிருந்தார்!

மகா அலெக்சாந்தர் தன்னுடைய கடற்படைத் தலைவனிடம் குறிப்பிட்ட 'தாம்பிரபரணி' எனும் தீவு ஈழம் தான்; 'தம்பிரான் பண்ணை' எனும் தமிழ்ப் பெயரே தாம்பிரபரணி' ஆயிற்று; விஜயன் வட நாட்டிலிருந்து 700 தோழர்களுடன் இத் தீவுக்கு வந்துசேர்ந்த போதும் இத்தீவின் பெயர் 'தாம்பிரபரணி' ஆகவே இருந்தது: 'தாம்பிரபரணி' பாளியுடன் சேர்ந்து 'தம்பபண்ணை' ஆயிற்று; ஒல்லாந்தர் தாம்பிரபரணியென்பதை 'தப்ரபேன்' என்று அழைத்தனர்; இப்படியழைக்கப்பட்ட இந்நாட்டில் தமிழர்களேவாழ்ந்தனர்; அத் தமிழர்களுக்கும் கி. மு. 2400 ஆண்டுகளுக்கு முன்பிருந்து முதலாவது பிரளயத்தில் அழிந்த முதல் தமிழ் சங்கத்துக்கும் தொடர்பு இருந்திருக்கிறது:

—இவ்வாறெல்லாம் தமது கட்டுரையில் குறிப்பிடும் திரு. சுந்தரலிங்கம், 'ஈழம்' தான் இந்நாட்டின் தொல் பெயர் என்றும், அச்சொல் உருவாகிய முறையையும், ஈழத்தின் தொல்குடிகள் தமிழர்களே என்பதையும் பல்வேறு ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி—ஈழம் தமிழனின் பூர்வீகத் தாயகம்— தமிழின் பிறப்பிடம் என்பதை தமது ஆராய்ச்சிக் கட்டுரையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

திரு. சுந்தரலிங்கம் அவர்கள, மாநாட்டின் முதல் நாளே முதலாவதாக தமது கட்டுரையை மாநாட்டுப்பிரதிநிதிகளுக்கு கொடுத்ததும் ஒருவகையில் நல்லதென்றே நான் கருதுகின்றேன். ஏனெனில் மாநாட்டுக்குவந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மாநாடு தொடங்குவதற்கு முன்னரே, ஈழம் தமிழர்களுக்கேயுரிய நாடு — ஈழத் தமிழர் வந்தேறு குடிகளல்லர்—வாழையடிவாழையாக இந்நாட்டில் வாழ்ந்து வருவோர் என்பதை உணர்ந்திடுவதற்கு—அறிந்திடுவதற்கு— சுந்தரலிங்கத்தின் கட்டுரை ஓர் தூண்டுகோலாகதிச்சயம் அமைந்திருக்கும்!

ஃ ஃ

மாநாட்டுப் பிரதிநிதிகளுடன் 'பாம்கோட்' உணவு விடுதியில் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளையின் இணைச்செயலாளர்களில் ஒருவரான ஜேம்ஸ் இரத்தினம் அவர்கள் அளித்த மதிய உணவை சுவைத்து அருந்திக்கொண்டிருக்கும் போது — மாநாட்டுக்கெதிராக தமிழ்ப்பகைவர்கள் செய்த சதிகளும், துரோகங்களும் என் நெஞ்சில் நிழலாடத் தொடங்கின; டாக்டர் வித்தியானந்தன் தமது தலைமையுரையில் குறிப்பிட்ட 'பத்தாவது ஆண்டில் ஏற்பட்ட தத்துக்கள்' பற்றிய எண்ண அலைகள் எழுந்த வண்ணமிருந்தன:

1964ம் ஆண்டுபுதுடெல்லியிலே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்கு அத்திவாரமிட்டவர்கள் ஈழத்தைச் சேர்ந்த வண. தனிநாயக அடிகள், பண்டிதர் கா. பொ. இரத்தினம், (காலஞ்சென்ற) பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகிய முப்பெரும் அறிஞர்களே!



பத்தாண்டுகளாக தமிழாராய்ச்சி மன்றத்தை சீராட்டித் தாலாட்டி வளர்த்து வந்தவர் — அதன் தந்தையென கருதப்படுபவர் — வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகள்.

இவ்வாறெல்லாமிருந்தும் அனைத்துலகத் தமிழாராய்ச்சிக்கே வித்திட்டஅறிஞர்கள் மாநாட்டுத் தலைவர் டாக்டர் சு. வித்தியானந்தன் அவர்கள் சுருக்கமாகக் கூறியிருப்பதைக் கீழே தருகிறேன்.

"இம் மாநாட்டைப் பற்றிய அறிக்கையில் அதன் பின்னணியை ஒரு சிறிது கூறுதல் அவசியமாகும்: பாரிஸ் மாநகரில் நடைபெற்ற மூன்றாவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது நான்காவது மாநாட்டை ஈழத்தில் நடத்தவேண்டுமென அழைப்பு விடுத்தோம்: அதனை அவர்கள் ஏற்றதன் பயனக, மாநாடு இங்கு நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்ள இலங்கைக்குழு செயலாற்றத் தொடங்கியதும் யாழ்ப்பாணத்திலேயே மாநாட்டினை நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது: இம்முடிவினை மாற்றிக் கொழும்பில் நடத்த இலங்கைக் குழுவினர் சிலர் எத்தனித்தபோதும், பொதுச் சபையின் தீர்மானத்தை அவர்களால் மாற்ற முடியவில்லை.

சிலர் இம்மாநாட்டை 1974ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குப் பிற்போடவேண்டுமென வற்புறுத்தினர்: இதனைப் பொதுச் சபை ஏற்க மறுத்தது: இவற்றின் விளைவாக கலாநிதி எச். டபிள்யு. தம்பையா இலங்கைக் கிளையின் தலைமைப் பதவியிலிருந்து தாமாகவே விலகிக்கொண்டார். ஆயினும் அவர் இலங்கைக் கிளையின் உறுப்புரிமையைத் துறக்கவில்லை. திரு. க. சி. தங்கராஜா அவர்கள் அமைப்புக்குழுவிலிருந்து விலகிக்கொண்ட போதும், துணைத் தலைவராகக் கடமையாற்றி வந்தார். திரு: கே. செல்வநாதன் இந்தியாவிற்கு அடிக்கடி போகவேண்டியிருப்பதனல் இணைப் பொருளாளர் பதவியிலிருந்து விலக விருப்புவதாகக் கூறி, விலகிக்கொண்டார்:

ஆராய்ச்சி மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பினை நாடிப் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருந்தோம்- அவரின் அமைச்சிலுள்ள மேலதிகாரிகளையும் நேரிற் கண்டு பேசினேம். கொழும்பில் மாநாட்டினை நடத்தினுல் தான் அரசாங்கம் ஒத்துழைப்பும் ஆதரவும் தருமெனப் பதில் கிடைத்தது. இப்பதிலை இலங்கைக் கிளையின் பொதுச்சபையிடம் சமர்ப்பித்தபோது, திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்திலேயே நடத்தவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்தைப் பிரதமருக்கு அறிவித்து, அவரை நேரிற் கண்டு இதுபற்றிப் பேசுவதற்கு அனுமதி கேட்டோம். ஆனுல் பிரதமரைக் காணச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

பிரதி அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடியே எம்மை அமைச்சிற்குப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் யாவும் செய்யப்பட்டு விட்டன என்றும், இனி இடமாற்றம் செய்ய முடியாதென்றும் நாம்கூறியபோது, கொழும்பிலேதான் நடத்த வேண்டும் என்றும், பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் மாநாட்டை நடத்தலாம் என்றும், தங்கள் அமைச்சைச் சேர்ந்த 'பாலர' எல்லாக் கலைநிகழ்ச்சிகளையும் ஒழுங்குசெய்து தருவார் என்றும், மந்திரிமார் பேசுவதற்குக் கொழும்புதான் வசதியென்றும், பெரும்பாலான சிங்கள மக்கள் பங்குபற்றுவதற்குத் தலைநகரே உகந்ததென்றும் பிரம்மாதமாகப் பேசினர்: இது ஆராய்ச்சி மாநாடு; அரசியல் விழாவன்று. இம் மாநாட்டில் எந்த அரசியல்வாதிக்கும் மேடை கொடுக்கப்படமாட்டாது, தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழர் பெரும்பாலாக வாழும்யாழ்ப்பாணத்திலேயே நடத்த வேண்டும்என்றும்கூறினேம்: கொழும்பில் நடத்தவேண்டுமென்பது மேலிடத்து முடிபு என்றார்; யாழ்ப்பாணத்தில் நடத்துவதென்பதே எமக்கு மேலிடத்து முடிபு என்று கூறிப் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தோம்.

இதற்குள் ஆளுங்கட்சியிலுள்ள தமிழ்ப் பெரியார்களும், அவர்களின் சார்பான தேசிய சபைத் தமிழ் உறுப்பினர்களும் மாநாடு குறுகிய நோக்கங்கொண்ட கில்லறை விழாவென்றும், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வருவதற்கு அனுமதி அளிக்கக்கூடாதென்றும், மாநாட்டைத் தடைசெய்யவேண்டுமென்றும் செய்தித்தாள்கள் மூலம் அறிக்கை விடுத்து, அரசை மேலும் குழப்பியடித்தனர். அரசுக்கு ஆதரவாகவுள்ள எழுத்தாளர் சங்கங்களும் கொழும்பிலேயே மாநாடு நடக்கவேண்டும் அல்லது தடைசெய்யப்படவேண்டும் என்று மனுச் செய்தன.

ஆராய்ச்சி மாநாட்டிற்கோ கலை நிகழ்ச்சிகளுக்கோ கண்காட்சிக்கோ அரசாங்க

## (10) 'கேட்டிலும் உண்டோர் உறுதி'

தோன்றிய ஈழமண்ணில், தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த விடாமல் தடுப்பதற்கு, எத்தனை சதிகள், சூழ்ச்சிகள் துரோகங்கள் நடைபெற்றன! அப்பப்பா அவற்றை நினைக்கும் போதெல்லாம் நெஞ்சம் பதறுகிறது!

'கேட்டிலும் உண்டோர் உறுதி' — என்று வள்ளுவன் சொன்னதுபோல — தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஏற்பட்ட தடைகள்—துரோகங்கள்—ஒரு பெரும் நன்மையையும் தமிழ் சமுதாயத்துக்கு செய்திருக்கின்றன!

அதாவது — தமிழ்ப்பகைவர்கள் யார்? தமிழின் எதிரிகள் யார்—தமிழ்த் தாயை கொன்றொழிக்கவும் தயங்காத குடிகேடர்கள் யார் — என்பதையெல்லாம் இன்றைய தமிழ் சமுதாயம் புரிந்துகொள்ள — அடையாளம் கண்டுகொள்ள—தமிழாராய்ச்சி மாநாடு ஒரு பெரும் வாய்ப்பாக அமைந்து விட்டது!

இன்றைய தமிழ் சமுதாயம் மட்டுமல்ல—வருங்கால தமிழ் சமுதாயமும் இதை உணர்ந்துகொள்ளவேண்டும் தமிழ் இனத்தின் ஈனப்பகைவர்களை அடையாளம் கண்டு கொள்ளவேண்டும் என்பதற்காக இந்த லக்ஷயத்தை சற்று தெளிவாக இக்கட்டுரையில் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதற்குமுன் மாநாட்டுக்கு ஏற்பட்ட தடைகளைப்பற்றி பாடசாலைகளைத் தர இயலாதென வடமாநிலக் கல்வி அதிகாரி மறுத்துவிட்டார். முற்பணங்கட்டப்பட்டிருந்த வீரசிங்கம் மண்டபத்தினையும் பாவிக்க முடியாதென்றனர்; வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வரவேற்பளிக்கவும் திறந்த வெளியரங்கினைத் தரவும் ஒப்புக் கொண்ட யாழ்ப்பாண மேயர், அரசாங்கத்தின் போக்கினை அறிந்ததும், மாநகர சபை எந்தவித ஒத்துழைப்போ உதவியோ வரவேற்போ தராதென்று கூறினர். இவை யாவும் உள்ளூர்ப் பத்திரிகைகளிலும் வெளிநாட்டுப் பத்திரிகைகளிலும் வெளிவரவே மாநாடு தொடங்குவதற்கு முன்னரே அது உலகப் பிரசித்திபெற்றுவிட்டது.

மாநாட்டுக்கு வருவோர் பெயர்கள் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்தூதர்களுக்குஅனுப்பப்பட்டு, அவர்களுக்கு இலங்கைக்கு வர அனுமதி வழங்கக்கூடாதெனக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதனைத் தட்டிக்கழித்து வந்தவர்கள் சிலர் கட்டுநாயக்கா நிலயத்தில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டார்கள். இச்செய்திகள் பிறநாட்டுமக்களைத் திகைக்க வைத்தன. திரும்பிச்சென்ற இவர் தமது நாடுகளின் வானொலியிலும் செய்தித்தாள்களிலும் பேட்டிகள் கொடுத்தனர். உலக அபிப்பிராயம் பாதகமாக வளர்

(6-ம் பக்கம் பார்க்க)

# எண்ணம்

## உணவுப் பிரச்சினையும்! உரிமைப் பிரச்சினையும்!!

உணவுப் பிரச்சினை, விலைவாசி உயர்வு, ஆகிய பொதுப் பிரச்சினைகளை முன்வைத்து மே முதல் நாளில் எதிர்க்கட்சிகள்—குறிப்பாக ஐக்கியதேசியக்கட்சியினர் — ஆரம்பிக்க விருப்பதாக கூறப்படும் சட்டமறுப்பு இயக்கத்துக்கு தமிழர் கூட்டணியின் பூரண ஆதரவைப் பெறும் முயற்சிகள் நடப்பதாக செய்திகள் கூறுகின்றன;

இந்தப் பிரச்சினையில் தமிழர் கூட்டணியும் திர்க்கமான ஒரு முடிவை இன்னும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் இது ஆழமாகச் சிந்தித்து—துருவித்துருவி ஆராய்ந்து—திர்மானிக்கப்படவேண்டிய ஒரு விஷயமாகும்.

இன்றைக்கு உணவுப் பிரச்சினையும் மற்றும் விலைவாசிப் பிரச்சினைகளும் தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் ஒருசேர வாட்டிவதைக்கின்ற பொதுப் பிரச்சினையாகத்தோன்றிய போதிலும்—சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வேறு; தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் வேறு என்பதில் யாருக்கும் எள்ளத்தனையும் ஐயம் இருக்க முடியாது.

சிங்கள மக்கள் இந்நாட்டில் பூரண சுதந்திரமுள்ள மக்களாக இருக்கிறார்கள். தங்களைத் தாங்களே ஆளுகின்ற இனமாக இருக்கிறார்கள்; அவர்களது இன, மொழி, மத, கலாசார உரிமைகள் அனைத்தும் புதிய அரசியல் சட்டத்தின் கீழ் பூரண பாதுகாப்புப் பெற்றுள்ளன. சுருக்கமாக கூறினால்—அரசியல் சுதந்திரத்தை சிங்கள இனம் பெற்றுவிட்டது. அது இப்போது பொருளாதார சுதந்திரத்துக்காக போராடி வருகிறது.

தனது பொருளாதார சுதந்திரத்தை எப்படி நிலை நாட்டுவது? எப்படி மீட்டுக்கொள்வது? இதற்கு வழி சனநாயகமா? கம்யூனிசமா? சர்வாதிகாரமா? சோசலிசமா? என்கின்ற கேள்விகளுக்கு விடை காணுவதிலேதான் சிங்கள நாட்டுக் கட்சிகளிடையே மோதல்களும் கழுத்தறுப்புக்களும் நடைபெற்று வருகின்றன;

ஆனால்—சிங்கள நாட்டின்—சிங்கள இனத்தின் — அரசியல் சுதந்திரத்தையும் மொழி, இன, மத உரிமைகளையும் — மீட்டுக்கொள்வதில் சிங்களக் கட்சிகள் எதுவித வேறுபாடுமின்றி ஒன்று பட்டியங்கியதையும்—தமிழ் சமுதாயத்தின் உரிமைகளை மறுப்பதில் ஒன்றுபட்டு செயல்பட்டதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்!

தமிழ் தேசிய இனத்தின் நிலையோ வேறு. தமிழ் மக்கள் இன்று அடிமை இனமாக—ஆளப்படும் இனமாக—ஆக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழனுக்கு தன்னைத்தானே ஆளும் உரிமை அடியோடு மறுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் ஈழத்திற்கு இன்னும் சுதந்திரம் வழங்கப்படவில்லை; தமிழ் இனத்தின் மொழி, மத, கலாசார, உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. அரசியல் சட்டரீதியாக தமிழினத்துக்கும் மொழிக்கும் எதுவித பாதுகாப்பும் இல்லை. தமிழ் ஈழம் இன்று யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட பூமிபோல வேட்டையாடப்படுகிறது அங்கு சிங்கள அரசு நியமித்துள்ள பொலிசாரினதும் மற்றும் ஆயுதப்படைகளினதும் சர்வாதிகாரக் கொடுங்கோன்மை நடைபெறுகிறது. தமிழ் இளைஞர்கள் ஏராளமானோர் விசாரணை ஏதுமின்றி—காரணம் ஏதுமின்றி சிறைகளில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்;

எனவே தமிழ் சமுதாயம்—ஈழத்தமிழ் நாடு—இன்றைக்கு தன்னுடைய சமுதாய, அரசியல் விடுதலைக்கு போராடவேண்டிய — தன்னுடைய சுதந்திரத்தை நிலை நாட்ட வேண்டிய கட்டத்திலேயே இருக்கிறது.

சிங்கள இனம், முதலாவது கட்டமான அரசியல் விடுதலையைப் பெற்றபின்னர் — இரண்டாவது கட்டமான பொருளாதாரப் பிரச்சினையை இன்று எதிர்நோக்கி நிற்கிறது. தமிழ் இனமோ இன்னும் தனது அரசியல் விடுதலைக்குப் போராட வேண்டிய முதலாவது கட்டத்திலேயே நிற்கிறது.

தமிழ் இனம் அரசியல் சுதந்திரம் பெறாததன் காரணமாக—சிங்கள நாட்டுடன் இன்னமும் இணைந்திருப்பதன் காரணமாக—சிங்கள அரசியல் அரங்கில் ஏற்படும் பொருளாதார நிலைகளினால் ஏற்படும் தாக்கம் தமிழ் மக்களையும் கடுமையாகப் பாதித்து வருகிறது என்பது உண்மைதான்!

இந்த நிலையில்—சிங்கள நாட்டு ஆளுங்கட்சிக்கோ—அல்லது சிங்கள நாட்டு எதிர்க்கட்சிக்கோ—அவர்கள் நடத்தும் பொருளாதாரப்போராட்டங்களில்—தமிழ் ஈழத்தின் அரசியல் சுதந்திரத்துக்கும் மொழி இனவிடுதலைக்கும் போராடி வருகின்ற — போராட சபதமேற்றிருக்கின்ற — தமிழரசுக் கட்சியும் தமிழர் கூட்டணியும் எவ்வளவு தூரம் பங்கு பற்றலாம்— அல்லது பங்கு பற்றாது ஒதுங்கியிருக்கலாம் என்பது மிகவும் நுணுகி ஆராயப்படவேண்டியதோர் அம்சமாகும்.

எந்தவொரு சிங்களக் கட்சியும் — அது ஐ.தே. கட்சியென்றாலும்சரி— சிறீலங்கா சுதந்திரக்கட்சியென்றாலும் சரி— தமிழ் தேசிய இனத்தின் அரசியல் சுதந்திரத்தையும், மொழி, இன, உரிமைகளையும் ஒப்புக்கொள்ள மறுத்துக்கொண்டே — அதே வேளையில் சந்தர்ப்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்கள் சுயநலத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு மட்டும் தமிழரசுக் கட்சியையோ தமிழர் கூட்டணியையோ பகடைக்காயாகப் பயன்படுத்திட முயல்வார்களாயின் அரசியல் முதிர்ச்சிபெற்ற தமிழர் கூட்டணித் தலைவர்கள், தங்கள் கடந்தகால அனுபவங்களைக் கொண்டு நிச்சயம் அதற்குப் பலியாகமாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

இன்றைய நிலையில் சாதாரண மக்களைப் பொறுத்தவரை உணவுப் பிரச்சினையே முக்கியமானது போலத் தோன்றினாலும் — அது தற்காலிகமானதென்பதே எமது கருத்தாகும். உணவுப் பிரச்சினைக்குள் தமிழ்சமுதாயத்தின் அடிப்படை உரிமைப் பிரச்சினைகள் — அமிழ்ந்து அழிந்து போகின்ற ஒரு நிலைதோன்றுவதை நாம் கிஞ்சித்தும் அனுமதிக்க முடியாது.

## நெஞ்சு பொறுக்குதில்லையே!

இன்று இந்த நாட்டில் மக்களின் சுதந்திரங்களில் எவ்வளவோ பாதிக்கப்பட்டு விட்டன, பறிக்கப்பட்டு விட்டன நாளுக்கு நாள் பறிக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன.

ஆங்கிலேயரும் ஐரோப்பியரும் ஆகிய அந்நியர்கள் இந்த நாட்டை ஆண்ட பொழுது மக்களுக்கு இருந்த சுதந்திரங்கள் கூட, நம்மை நாமே ஆளுகின்றோம் என்று சொல்லிக் கொள்ளப்படும் இந்த நாளில், இல்லாமல் போய்விட்டன! பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம், வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பும் சுதந்திரம் என்று பல பாதிக்கப்பட்டுள்ளன. பறிக்கப்பட்டு விட்டன!

இவற்றைவிட, மக்களுக்கு முன்பு இருந்து வந்த வசதிகள், வாழ்க்கைத் தரங்கள் எல்லாம் இப்பொழுது வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டன. மக்கள், இன்று, உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி படுத்துறங்க வீடின்றிப் பாயின்றி அவதிப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

### மக்கள் நிலை

பச்சைக் குழந்தைகள் பருகுவதற்குப் பால் இன்றிப் பதைத்துத் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்; வயோதிபர்கள் குடிக்கக் கஞ்சி இன்றியும் போர்த்துக்கொள்ள ஆடை இன்றியும் வாடி வதங்கி, நடுங்கிக் கலங்கிக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள்; வாலிபர்கள் வயிறொட்டி உடல் மெலிந்து சோர்ந்து தள்ளாடுகிறார்கள்; நோயாளர்கள் நல்ல மருந்துகள் கிடைக்காமல் வருந்தித் துன்புறுகிறார்கள்; கர்ப்பிணிகள் தங்கள் வயிற்றிலுள்ள பிள்ளைகளை உயிரோடு பெற்றெடுப்போமோ என்று எண்ணிப் பசியால் பயந்து பெருமூச்சு விடுகிறார்கள்.

நல்ல பண்டங்களைக் கேட்டறியாத, தின்றறியாத நிலையில் இன்றைய இளந் சந்ததியினர் வளர்ந்து வருகின்றனர். 'பட்டர்' என்று சொன்னால் 'வட் இஸ் தற்' என்று கேட்டுத் திகைக்கிறார்கள் இன்றைய பணக்கார வீட்டுச் சிறுவர்களும்!

### சுதந்திரம் இல்லை

ஆனால், இவற்றை எடுத்துச் சொல்வதற்குக்கூட சுதந்திரம் இல்லாத நிலை இன்று இந்த நாட்டில் உருவாகிக் கொண்டு வருகின்றது! வெகு விரைவில் இந்த நாட்டில் ஸ்டாலின் ரஷியாவில் நடத்திய அடக்குமுறை ஆட்சி ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

இன்று இந்த நாட்டு மக்களின் சுதந்திரங்களும் வசதிகளும் வாழ்க்கைத் தரங்களும் பொதுவாக எல்லா மக்களிடமிருந்தும் குறைக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் இருந்த போதிலும், தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்த வரையில் இவை மேலும் அதிகமாகவும் வன்முறையாகவும் அடாத்தாகவும் — ஒரு துளி நீதி நியாயம் கூட இல்லாமல் — குறைக்கப்பட்டும் பறிக்கப்பட்டும் உள்ளன; குறைக்கப்பட்டுக் கொண்டு வரப்படுகின்றன;

### வெள்ளையர் விலகிய பின்னர்.

1948ம் ஆண்டு இந்நாட்டிலிருந்து வெள்ளையர் ஆட்சி விலகிய பின்பு இந்நாட்டு மக்களுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது என்று கூறிக்கொண்டு அதுவரை இந்நாட்டின் குடியுரிமை உள்ளவர்களாக இருந்து வந்த தமிழ்பேசும் மக்களின் ஒரு பகுதியினர் — மலைநாட்டுத் தமிழர்கள் என்று பொதுவாக அழைக்கப்பட்ட இந் நாட்டின் செல்வத்தைப் பெருக்கிய தமிழ்ப் பேசும் மக்கள்—திடீரென்று நாடற்றவர்களாக்கப் பட்டனர்!

### சிங்களம் மட்டும்

இந் நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது 1948ம் ஆண்டில்லல 1956ம் ஆண்டிற்தான் என்று சொல்லிக்கொண்டு "சிங்களம் மட்டும்" என்ற குரலை எழுப்பிக் கொண்டு 1956ம் ஆண்டில் பதவிக்கு வந்த திரு. பண்டாரநாயகாவின் 'அப்பே(ய்) ஆண்டுவ' இந்நாட்டில் வாழும் வாழப் போகும் தமிழ்ப் பேசும் மக்கள் எல்லோரினதும் மொழி உரிமையைப் பறித்தது!

சிங்களக் காடையர்கள் தமிழ்ப் பேசும் மக்களை அடித்துத் துன்புறுத்தி, மான பங்கப்படுத்தி அவர்களின் உடமைகளையும், ஏன் உயிர்களையுமே பறித்த பொழுது பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தது!

இந்த நாட்டுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்தது 1948ம் ஆண்டிலுமல்ல; 1956ம் ஆண்டிலுமல்ல 1960ம் ஆண்டில் தான் என்று கூறிக் கொண்டு திரு. பண்டாரநாயகா அவர்களின் மனைவியார், அம்மையார் திருமதி. சிறி(ய)மாவோ பண்டாரநாயகாவின் அரசு தமிழ்ப் பேசும் மக்கள் மீது பட்டாளங்களை ஏவி விட்டது. பள்ளிக்கூடங்களைப் பறித்தது.

### டட்லி அரசு ஏமாற்றியது

தமிழ்ப் பேசும் மக்களுக்கு மொழி உரிமையை வழங்குவேன், அவர்களின் பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு மாவட்ட சபைகளைக் கொடுப்பேன் என்று எழுத்து மூலம் உறுதி கூறித் தமிழ்ப் பேசும் மக்களின் உதவியைப் பெற்று 1965-ம் ஆண்டில் பதவிக்கு வந்த திரு. டட்லி சேனநாயகாவின் அரசாங்கம் தன் காரியம் நிறைவேறிய பின்பு அவற்றைக் கொடுக்காமல் ஏமாற்றியது!

### புதிய அரசியல் சட்டம்

சந்திரமண்டலத்துக்குச் சென்று கொண்டுவந்தாவது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கிழமையும் இவ்விரண்டு கொத்து அரிசி சும்மா கொடுப்பேன் என்று கூறி மக்களை ஏமாற்றி 1970-ம் ஆண்டில் பதவிக்கு வந்த பண்டாரநாயகா அம்மையாரின் கூட்டரசு இந்த நாட்டுக்கு சுதந்திரம் 1948-ம் ஆண்டிலும் கிடைக்கவில்லை; 1956-ம் ஆண்டிலும் கிடைக்கவில்லை; 1960-ம் ஆண்டிலும் கிடைக்கவில்லை; இனிமேல்தான் கிடைக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு 1972-ம் ஆண்டில் ஒரு புதிய அரசியல் திட்டத்தைக் கொண்டு வந்து, பழைய அரசியல் சட்டத்தில் பெயரளவுக்கு ஆகுதல் தமிழ்ப்பேசும் மக்களுக்கு இருந்த ஒரே ஒரு பாதுகாப்பையும் அகற்றி விட்டு தமிழ்ப் பேசும் மக்களை இந்த நாட்டில் இரண்டாந்தர மக்களாக ஆக்கியது! மொழி உரிமையை முற்றுமுழுதாகப் பறித்தது! புத்த மதத்துக்கு முதலிடம் கொடுத்து, அம் மதத்துக்கு மட்டும் பொது மக்களின் — புத்தமதம் அல்லாதவர்களினதும் — பணத்திலிருந்துதவி செய்வதற்கு வழி செய்து, தமிழ்ப்பேசும் மக்களின் மதங்களை உலகத்துக் கீழே தள்ளி விட்டது!

தமிழ் மக்களின் தோட்டந்துரவுகள் காணி பூமிகளைப் பொறுக்கி எடுத்து சுவிகரித்து அவர்களை நடுத்தெருவில் விட்டது! விட்டுக்கொண்டு வருகின்றது.

பேச்சுரிமை, எழுத்துரிமை நடமாடும் உரிமை, புத்தகம் வெளியிடும் உரிமை, வெளியிட்ட புத்தகத்தை விற்கும் உரிமை, கூட்டம் கூடும் உரிமை, கூடிய கூட்டத்தை படம் பிடித்துக் காண்பிக்கும் உரிமை என்று பலவித உரிமைகளைப் பறித்ததோடல்லாமல் தமக்குள்ள உரிமைகளை— ஐக்கிய நாடுகளின் சாசனத்தால் உலக மக்கள் எல்லோருக்கும் உறுதியளிக்கப்பட்டுள்ள உரிமைகளை — கொண்டாட முற்படும் தமிழ் மக்களைப் பிடித்து மறியலில் வைத்து வாட்டியும் வருகின்றது!

### தமிழ் இளைஞர்

இந்த நாட்டிலே உள்ள அரசாங்கத்துக்கு எதிராக 1971-ம் ஆண்டில் சதி செய்து, அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் நாட்டுக்கும் பல கோடிக்கணக்கான பொருட் சேதங்களையும் பல நூற்றுக் கணக்கான உயிர்ச் சேதங்களையும் விளைவித்து புரட்சிக்காரர்களில் பிடித்து அடைக்கப்பட்ட சுமார் பதினையாயிரம் பேர்களில் பாதிப் பேரளவில் நீதி மன்றத்துக்குக் கொண்டு வரப் படாமலே விடுதலை செய்தும் மற்றவர்களுக்கு நீதிவிசாரணை நடத்தி அவர்களில் பலரைக் குற்றமற்றவர்களென்று விடுதலை செய்தும் அப்படி விடுதலைசெய்யப்பட்டவர்களில் சிலருக்கு வேலைகள் வழங்கியும், குற்றம் கண்டு தண்டிக்கப்பட்டவர்களையும் மறியலில் வைத்திராமல் வெளியில் விட்டும், இப்படியெல்லாம் செய்வதைத் தான் செய்யும் பெருந்தன்மையான - கருணையான - செயல் என்று தன்னைத்தானே புகழ்ந்தும் வரும் இந்த நாட்டு அரசாங்கம் எவரோ ஒருவர் எங்கோ ஒரு மூலையில் ஏதோவொரு மேடையில் எதுவோ ஒன்றைப் பேசினார் என்று சொல்லியும், யாரோ ஒருவர் ஏதோவொரு பத்திரிகையில் எதையோவொன்றை எழுதினார் என்று கூறியும், எவரோ ஒருவர் ஏதோவொரு புத்தகத்தை வெளியிட்டார் என்றும் இன்னொருவர் ஏதோவொரு புத்தகத்தை விற்பனை செய்வதற்கு வைத்திருந்தார் என்றும் வேறொருவர் யாரோ ஒருவருக்குக் கறுப்புக்கொடி காட்டினாரென்றும் மற்றுமொருவர் யாரோ ஒரு அமைச்சருக்குக் கல் வீசுவதற்கு இருந்தாரென்றும், இப்படியாக என்னென்னவோ குற்றங்களைச் சாட்டியும் இன்னும் சிலர் மீது மேற்

(5-ம் பக்கம் பார்க்க)

# 'உணர்ச்சிக் கவிஞன் வாழ்க!'

# மேத்தேனுடு எடுத்த பிறந்தநாள் விழா!

4-4-74ல் மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் நிகழ்ந்த காசி ஆனந்தன் பிறந்த நாள் விழாவில் உரையரங்கில் மாலா ராமச்சந்திரன், அற்புதராசா குருஸ், பா. அரங்கநாதன், இ. பன்னீர்ச்செல்வன், கோவிந்தசாமி, க. கந்தசாமி (முகிலழகன்) ஆகியோர் உரையாற்றினர். இதில் சிறப்புச்சொற்பொழிவாளராக ஈழத்தமிழ் எழுத்தாளர் பேரவை சார்பில் சட்டமாணவர் திரு. கனக மனோகரன் அவர்கள் கலந்து கொண்டார்.

அவர் பேசுகையில், மக்கள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. இமை கொட்டாமல் பேச்சில் மூழ்கியிருந்தனர். இவருடைய பேச்சு உணர்ச்சியாகவும் உருக்கமாகவும் இருந்தது. சொற்பொழிவில் கலந்துகொள்ள வந்த இவர் ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க கவியரங்கிலும் பங்கு பற்றினார்.

'வாழ்க உணர்ச்சிக்கவி' என்ற தலைப்பிலான கவியரங்கிற்கு கவிஞர் திமிலைக் கண்ணன் தலைமை தாங்கினார். இதில் கவிஞர்கள் செ. குணரெத்தினம், எருவில் மூர்த்தி, கனக மனோகரன், தேனூரான், முத்தழகு, செ. சிவானந்ததேவன், புவன், குணசேகரன், வேணுதாஸ் ஆகியோர் பங்குபற்றினர்.

இதைத்தொடர்ந்து 'காசி ஆனந்தன் கவி' என்ற கவிதைப் போட்டிக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த விழாவில் முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவரும், முன்னாள் பட்டிருப்புத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. இராசமாணிக்கம், முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் போன்ற அரசியற் பிரமுகர்களும் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர்.

'காசி ஆனந்தன் இலக்கிய வட்டம்' ஒழுங்கு செய்த இவ்விழாவை திரு. பி. வி. கந்தையா அவர்கள் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைக்க செயலாளர் நடேசானந்தம் வரவேற்புரை வழங்கினார். வண. பிதா யோசேப்பு மேரி அடிகள் தவிர்க்க முடியாத காரணத்தால் வருகை தராததால் அவருக்குப் பதிலாக முதுபெருங்கவிஞர் அழகேசமுதலியார் தலைமை தாங்கினார்.

திரு. அம்பலவாணர் கவிதைப்போட்டிக்கான பரிசில்கள் வழங்கினார். சரவணபவனின் நன்றியுரையுடன் விழா நிறைவெய்தியது.

## பண்டிதரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றும், இது விஷமிகளின் வேலையென்றும் போக்குவரத்து அமைச்சர் தேசிய பேரவையில்கூறியதைத்தொடர்ந்து-காவலூரர் பா. உ. பண்டிதர் இரத்தினம் அமைச்சருக்கு கடிதம் எழுதினார்.

பண்டிதர் தமது கடிதத்தில், தமிழை இரண்டு அங்குலமாகச் சிறுமைப்படுத்தும்படி இ. போ. ச அதிகாரிகளால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் இலக்கத்தை அமைச்சருக்கு சுட்டிக்காட்டி — இப்போது என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டிருந்தார்!

பண்டிதர் இரத்தினத்தின் கடிதத்துக்கு போக்குவரத்து அமைச்சர் லெஸ்லி குணவர்த்தனா அனுப்பியுள்ள பதிலில் இ. போ. ச. செயலாளர் இப்பிரச்சினைபற்றி ஆராய்ந்து தமக்கு அனுப்பியுள்ள அறிக்கையை இணைத்துள்ளார். அந்த அறிக்கையில், தமிழை 2 அங்குல பருமனிலும் சிங்களத்தை 5 அங்குல பருமனிலும் எழுதுமாறு இ. போ. ச. உத்தரவிட்டுள்ளது உண்மைதான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நடைமுறைக்குப் பாராளுமன்ற உறுப்பினர் கா. பொ. இரத்தினம், எதிர்ப்புத் தெரிவித்துள்ளமையால், வடபகுதியில் மட்டும், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் சேரிடப் பலகையில் ஒரே அளவினதாக எழுதப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கே வந்த பிரதமரின் மகன் அனுரா பண்டாரநாயக்கா, அங்குள்ள சுதந்திரக்கட்சித் தரகர்களுக்கு இ. போ. ச. வில் தமிழ் இடம் பெறச் செய்வதாம் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார்—

வடபகுதியின் சிங்கள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தரகர்கள் அனைவரும் குமாரசூரியர் தலைமையில் அலரி மாளிகைக்கு படையெடுத்து இ. போ. ச. வில் தமிழ் ஒதுக்கப்படுவது குறித்து பிரதமருக்கு சுட்டிக்காட்டியதாக செய்திகள் வந்தன. அதைத் திருத்துவதாக பிரதமர் தம்மிடம் வாக்குறுதியளித்ததாகவும் பசப்பினர்.

ஆனால் இவர்கள் எல்லாம் கையாலாகாதவர்கள் என்பதும் பண்டிதர் இரத்தினமே செயல் வீரர் என்பதும் இப்போது நிரூபிக்கப்பட்டு விட்டது என்றும் போக்குவரத்து அமைச்சரே தாம் எழுதியுள்ள கடிதத்தில் கா. பொ. இரத்தினம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதன் காரணமாகவே வடக்கே சம அந்தஸ்து வழங்கப்படுவதாக திட்டவட்டமாக சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் ஆளுங்கட்சித் தரகர்களின் முகமூடி இதனால் கிழிபட்டுவிட்டதென்றும் கூட்டணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## இ. தொ. கழக பொதுச்செயலாளர் தரும் புத்தாண்டுச் செய்தி!

''பசியும் பட்டினியும் துயரமும் துன்பமும் நிறைந்த 'பிரமாதீச' ஆண்டு போய் மறைய புதிய 'ஆனந்த' ஆண்டு பிறக்கிறது. புதிய ஆண்டு, அதன் பெயருக்கொப்ப பொதுவாக தமிழ் மக்கள் மத்தியிலும் — குறிப்பாக தோட்டத் தொழிலாளர் மத்தியிலும் ஆனந்தத்தை கொண்டு வர வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

—இவ்வாறு இ. தொ. கழகப் பொதுச்செயலாளர் சட்டத்தரணி திரு. மு. பரராசசிங்கம் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா பா. உ. திரு. செல்லத்தம்பு அண்மையில் எழுப்பிய கேள்வியை தொடர்ந்து—வவுனியாவில் உயர் நீதிமன்றம் கூட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியாவில் உயர் நீதிமன்றம் ஏப்ரல் 17ல் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வழக்குகளைத் தமிழில் விசாரிப்பதற்காக யாழ் உயர் நீதிமன்ற நீதியரசர், அனுராதபுரம் பகுதிக்கும் மேலதிக நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வேலையில்லாப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சிவிக்கும், கம்பெனிக்காரருக்குச் சொந்தமான குச்சு வீடுகள் அருகே அமைந்துள்ளன. மண்ணைப் பதன் படுத்தும் தமிழ் உழவர்கள், தமதுபாடல்களுக்குப்பெயர் பெற்றவர்கள் ஆனால், தேயிலைத் தோட்டங்களிலே அவர்கள் பாடுவதை நீங்கள் கேட்கமுடியாது. சகிக்க முடியாத வெயிலில் அவர்கள் செய்யும் வேலை அதிகப் இளைப்பை உண்டாக்கும்.

.........''தோட்டத்தொழிலாளிகள் கருணையற்றமுறையில் கசக்கிப்பிழியப்படுகின்றனர். ஒரு தொழிலாளி தனது பங்கைச் சரிவரக் கொடுக்கத் தவறினால். அவன் வேலையிலிருந்து விலக்கப்படுகிறான். வேலையில்லாப் பிரச்சினையானது முக்கியமாக, அனேகர் தமிழராக இருக்கும் தோட்டத்தொழிலாளிகளிடையே தான் முக்கியமாகப் பரந்து காணப்படுகிறது;

ஜனநாயகத்தொழிலாளர் காங்கிரஸ் தலைவரான அப்துல் அசீஸ், வெளிநாட்டாருக்குச் சொந்தமாக உள்ள தோட்டங்களில் நிலவும் வேலை வாய்ப்புக்களைப் பற்றிக் கூறுகையில், ''பட்டினிக்கூலிக்காகத் தொழிலாளிகள் காலையிலிருந்து இரவு வரை வருந்தி வேலை செய்கிறார்கள் தொழிலாளிகளின் ஒவ்வொரு ஆயிரம் பிள்ளைகளிலும், நூற்றுப்பத்துப் பேர் தமது முதல் வயதை முடிக்கு முன்னரே இறக்கிறார்கள்'' என்றார்.

பிற்குறிப்பு:—

'நியூடைம்ஸ்' எனும் இவ் வார சஞ்சிகை இரஷ்ய மொழி, ஆங்கிலம், பிரெஞ்சு ஜேர்மன், ஸ்பானிஷ், போலிஷ்மொழி, செக் மொழி, அரபிக் ஆகிய எட்டு மொழிகளில் வெளிவருகிறதென்பது குறிப்பிடத்தக்கது!

(தகவல்:— சிறீ சந்திரா சச்சிதானந்தம்)

**காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன் சிறையில் இன்று 653-வது நாள்**

## நெஞ்சு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லப்பட்டன போன்று தானும் ஏதாவது நொண்டிக் குற்றங்களைக்கூட சுமத்தாமலே (சுமத்தமுடியாமலிருந்தும்), ஏராளமான தமிழ் இளைஞர்களை சிறையில் போட்டு மாதக்கணக்காக, வருடக்கணக்காக வைத்திருந்து அவர்களை விடுதலை செய்யாமலும் நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்லாமலும், ஆனால் அடிக்கடி பொலிசாரின் நாலாம் மாடிக்கு மட்டும் கொண்டுபோய் அவர்களைப் பயமுறுத்திக் கொண்டுமிருக்கிறது இந்த அரசாங்கம்!

அரசாங்கத்துக்கு எதிராகச் சதிசெய்து, புரட்சி செய்து பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் விளைவித்தவர்களுக்கு நீதி விசாரணையும் விடுதலையும் அட்டி ஒன்றும் செய்திராதவர்களுக்கு வருடக்கணக்காக நீதி விசாரணை மறுப்பும் சிறைச்சாலையும் 4வது மாடிப் பயணமும் பயமுறுத்தலும் கொடுத்து வித்தியாசம் காட்டுவதேன்? முன்னையவர்கள் இந்த நாட்டின் ஆளும் (சிங்கள) இனத்தை சேர்ந்தவர்கள் என்பதினாலும் பின்னையவர்கள் ஆளப்படும் (தமிழ்) இனத்தவர்கள் என்பதினாலுந்தானே!

இப்படியாக இந்த நாட்டிலே தமிழ்ப் பேசும் மக்களுக்கு இன்னல்களும் அநீதிகளும் ஒன்றுக்கு மேல் ஒன்றாக வருடத்துக்கு வருடம் மாதத்துக்குமாதம் நாளுக்கு நாள் இழைக்கப்பட்டுக் கொண்டுவரப் பட்டுள்ளது; வரப்படுகின்றது.

என்ன செய்யலாம்?

இன்று இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்களின் நிலை முன்பு இருந்ததிலும் பார்க்க மோசமாகி உள்ளது வருங்காலத்தில் இன்று இருக்கும் நிலையிலும் மோசமாகவே இருக்கப் போகின்றது;

இந்த நிலையில் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் என்ன செய்ய வேண்டும்?

— அருள்

## சிங்களக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் சரி, இலங்கையில் தயாரிக்கப்படும் படங்கள் என்றாலும் சரி—சிங்களத்தில் 'டப்' செய்யக்கூடாதுஎன்று உத்தரவிட்டுள்ள திரைப் படக்கூட்டுத்தாபனம், சிங்களப் படங்களை தமிழில் 'டப்' செய்து திரையிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.

உலகத்தமிழ் மாநாட்டுத் திரைப்படம் தகுந்த காரணமின்றி தடைசெய்யப்பட்டதும் — சிங்களப்படங்களை தமிழ் படுத்தி தமிழர்கள் மீது திணிப்பதும் — தமிழ் கலாசாரத்தை நசுக்கும் நடவடிக்கைகள் என்றே கருதப்படுகின்றன;

இதுபற்றி சுதந்திரன் நிருபரிடம், பிரபல கட்டிடக் கலைஞரும், ஈழத்தில் தமிழ்ப் படம் தயாரித்து, அதன் மூலம் அந்நிய செலாவணியைச் சம்பாதித்துக்கொடுத்தவருமான தமிழ்ப்படத் தயாரிப்பாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் — இந்திய திரைப்படங்கள் இறக்குமதியை முன்னர் தாம் ஆதரித்தது, ஈழத்தில் தமிழ்த்திரைப்பட வளர்ச்சியை கருத்தில் கொண்டு தான் என்றும் — சிங்களப் படங்களை தமிழில் 'டப்' செய்து வெளியிட்டு தமிழ் மக்கள் அதையே பார்க்கும் படியான சூழ்நிலையை தோற்றுவிப்பதன் மூலம், திரைப்படக்கூட்டுத்தாபனம் சிங்களப்பட வளர்ச்சியையே கருத்தில் கொண்டுள்ளதே தவிர தமிழ்ப் படங்களின் வளர்ச்சி பற்றி அக்கறை கொள்ளவில்லையென்றும்—தமிழ் மக்களின் பொழுது போக்கு உரிமையிலும் தலையிட்டு, அதையும் சிங்கள மயமாக்குவது கண்டிக்கத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

## மலர்க்கண்காட்சி

மைசூர், கோலார் தங்கவயலைச் சேர்ந்த பேராசிரியர் வ. பெருமாள் அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்த சிறப்பு மலர்கள் அனைத்தையும் தொகுத்து விரிவான அளவில் மலர்க் கண் காட்சி ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார். இம் மலர்க்கண் காட்சியில் இடம் பெறுவதற்காக மலர்களை அனுப்பவிருக்கும் ஈழத் தமிழ் அன்பர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம்.

**Prof. V. Perumal**
VII Cross Nehru Ground
Robertsonpet,
Kolar Gold Field
Mysore State
INDIA.

## நெடுங்கேணி உதயசூரியன் இளைஞர் விவசாயக் கழகம் - புதிய நிர்வாகிகள்

தலைவர்—: த. ம. தேவேந்திரன். உபதலைவர்:—செல்வி புனிதவதி வேலாயுதம். செயலாளர்—: பொ. பத்மநாதன் உபசெயலாளர்—: செல்வி விஜயலட்சுமி தில்லைநாதர். பொருளாளர்—: இ. லோகநாதன்.


## படிப்பு

"படிப்பே மனிதனுக்கு அழகு. சேர்த்து வைத்த செல்வம். இன்பத்தையும் புகழையும் சுகத்தையும் அளிக்கிறது. குருவுக்கெல்லாம் மேலான குருவாக விளங்குகிறது. அயல் நாடுகளில் உறவினர் போல உதவுகிறது. தெய்வம் போன்றது. அரசர்கள் இதனைத் தான் பூசிக்கிறார்கள். பணத்தையல்ல. எனவே படிப்பில்லாதவன் நாலு கால் பிராணிக்குச் சமமே.

—ஆன்றோர் மொழி

**15 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

**மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,**
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# 'இடி அமினை'யும் தோற்கடித்தது சிங்கள அரசின் கெடுபிடி!

## இந்திய வானொலியின் செய்தியே தமிழ் மாநாடு நடக்க வழி கோலியது!

### இலண்டன் தமிழர்களின் அறிக்கை—பகுதி (3)

தமிழ் மொழிக்கு அரங்கில் அந்தஸ்துக் கிடைப்பதையிட்டு இலங்கையின் வகுப்புவாதச் சக்திகளும் சிங்கள இன வெறியரும் பொறாமையும் பொச்சரிப்பும் கொண்டிருந்தனர். இலங்கையின் ஆங்கில, சிங்கள தமிழ்த் தினசரிகளின் சொந்தக்காரர்கள் இத்தகைய குரோத உணர்வு மிக்க சிங்களமுதலாளிகளே: இவற்றுள், ஏரிக்கரை நிறுவனம் என்னும் பிரபல்யமான பத்திரிகை நிறுவனத்தை அண்மையில் அரசு தன் சொத்தாக்கிக் கொண்டது. வழக்கமாக தமிழ் மக்கள் பற்றிய செய்திகளைப் புறக்கணித்து இருட்டடிப்புச் செய்து, அல்லது திரித்து வெளியிட்டு, பழக்கப்பட்டுவிட்ட ஏரிக்கரைப் பத்திரிகைகளுள் செல்வாக்கு மிக்க ''சிலோன் டெயிலி நியூஸ்'' என்ற ஆங்கிலத் தினசரி ''மாநாட்டுக்குக் கொழும்பே சிறந்தது'' என விசேட அக்கறையெடுத்து ஆசிரியத் தலையங்கம் தீட்டியதென்றால், மாநாட்டைவிட்டு அரசு எவ்வளவு தூரம் இங்கிதமற்ற ஈடுபாடு காட்டிற்று என்பது புலனாகும்:

### இலங்கை வானொலியின் காழ்ப்பு

தமிழ் மாநாட்டுக்கெதிரான அபசுரம் கேட்கத் தொடங்கிய நாளிலிருந்து மாநாடு முடியும் வரைக்கும் இலங்கைச் செய்தித் தாள்களும் வானொலியும், மாநாட்டை மட்டம் தட்டும் செய்திகளை வெளியிட்டுக்கொண்டேயிருந்தன. இதற்குமாறாக, மாநாடு சிராகவும் சிறப்பாகவும் நடைபெற்ற நாட்களில், மாநாட்டின் சிறப்பினை இந்திய வானொலியும் இலண்டன் பி.பி.சியும் கூட ஒலிபரப்பின்; ஆனால், இலங்கை வானொலியோ மிதமிஞ்சிய காழ்ப்புணர்ச்சியுடன் மௌனம் சாதித்தது. மாநாட்டின் இறுதியில் மரணவொலி கேட்டபோது மட்டும், மாநாட்டுக்கு மாசு கற்பித்தற்காகப் போலும், அரசு மீண்டும் வானொலியில் மாநாட்டின் விசாரமான முடிவினை விமர்சிக்கத் தலைப்பட்டது:

அரசின் எதிர்ப்பின் மத்தியிலும் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளைக் கழகத்தினால் நியமிக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைக் குழுக்கள் துரிதகதியில் கவனித்துக் கொண்டிருந்தன. பொதுமக்களும் தமது அபரிதமான ஆதரவினைப் பல்லாற்றலும் வழங்கினர். மாநாட்டுக்குழுவினர் யாழ்ப்பாண மாநகராட்சியின் மேயரைக் கண்டு பேசி, மாநகராட்சியின் மண்டபங்கள், மைதானங்கள், அரங்குகள் என்பனவற்றை மாநாட்டுக்குத் தந்துதவுவதென்றும், வேண்டிய மின்சார வசதியை அளிப்பதென்றும், மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு மேயர் வரவேற்பு அளிப்பதென்றும் ஏற்பாடாயிற்று.

3-ம் தேதி மாநாடு தொடங்கவிருந்தது. ஆனால் 1-ம் தேதி செய்தித்தாள்களில் வந்த செய்தி தமிழ் மக்களை நிலைகுலையச் செய்தது; மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டறிஞர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விசா வழங்கக் கூடாதென இலங்கை அரசு தன் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அறிவித்திருக்கிறது என்ற சேதிதான் அது. அது மட்டுமன்று, ஏற்கனவே இலங்கைக்கு வந்து சேர்ந்துவிட்ட வெளிநாட்டு அறிஞர்கள் பலரும் விமானத்தளத்தில் வைத்தே திருப்பியனுப்பப்பட்ட சேதியும் தெரிய வந்தது. மாநாட்டுக்கு வரும் அறிஞர்கள் உலகின் பல்வேறு கல்விக் கழகங்களிலும் ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டுள்ள மேதைகள் என்பதையும் மறந்து, அவர்கள் இலங்கையினுள்ளே புகுந்துவிடாமல் அவர்களைத் தடுத்து நிறுத்தும்படி அரசு இலங்கையின் துறைமுகங்களையும் விமானத் தளங்களையும் முன்னெச்சரிக்கை செய்திருந்தது.

அரசின் ஆதரவுத்தினசரியான ''டைம்ஸ் ஆப் சிலோன்'' என்ற பத்திரிகை குறித்த அறிஞர்களையெல்லாம் ஏதோ கிறிமினல் குற்றவாளிகள் அல்லது சர்வதேசக் கடற்கொள்ளைக்காரர் அல்லது கள்ளக் கடத்தல்காரர் என அர்த்தப்படும்படியாக ''தடுப்புமுனைகள் அனைத்தும் உஜார்ப்படுத்தப்பட்டுள்ளன; எவரும் நுழையாமல் விசேட கண்காணிப்பு'' என மகுடமிட்டுச் செய்தி வெளியிட்டது.

### இடி அமினையும் தோற்கடித்தது இலங்கை!

இலங்கை அரசின் இந்தக் காட்டுமிராண்டி நடவடிக்கை உகண்டாத் தலைவன் இடிஅமினைக் கூட நாகரீகமானவனாக்கும் தன்மையது. இந்த அநாகரிக நடவடிக்கை வெளியுலகுக்குத் தெரியாதபடி இலங்கை வானொலியும் செய்திப் பத்திரிகைகளும் இருட்டடிப்புச் செய்தன. அரசின் இந்த அடாதுடித்தனம் கண்டு மாநாட்டு அமைப்பாளர்கள் மனம் தளர்ந்தது உண்மையே; அதற்கும் மேலாக அரசாங்கத்தின் எடுபிடியான யாழ்ப்பாணம் மேயர், தான் முன்பு கொடுத்த வாக்குறுதியையும் மீறி, அரசாங்கத்தின் தூண்டுதலின் பேரில், மாநகராட்சிஅரங்குகள் மைதானங்கள் எவற்றையும் மாநாட்டுக்குக் கொடுத்துதவவோ பிரதிநிதிகளை வரவேற்கவோ மறுத்துவிட்டார்: மாநாடு தொடங்க இன்னும் இருபத்திநான்கு மணிநேரமே இருந்தது. தக்க தருணத்தில் எல்லாம் தரைமட்டமாகிவிடுமோ என அமைப்பாளர்கள் அஞ்சினர் எனினும், சித்தம் சிதறமல் மாற்று மண்டபங்களை ஏற்பாடு செய்வதிலும் அரங்குகளை நிர்மாணிப்பதிலும் ஈடுபட்டனர்:

### இந்திய வானொலி

இந்நேரத்தில் இந்திய வானொலிச் செய்தியின் எதிரொலியே மாநாட்டை அது மூழ்கடிக்கப்படுவதினின்றும் மீட்டதெனலாம். வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்ட செய்தியை இந்திய வானொலிச் செய்தி அகில உலகும் கேட்கக் கூறிற்று: அச்செய்தியை இலண்டன் பி.பி.சியும் எதிரொலித்தது. அந்த எதிரொலி 'வாய்ஸ் ஆப் அமெரிக்காவிலும்' எதிரொலித்தது, இந்தியப் பத்திரிகைகளும் இச்செய்தியை வெளியிட்டன.

சர்வதேச அரங்கிலே தமக்கு அவமானம் நேரிடுவதைக்காணச் சகிக்காத இலங்கை அரசு, ''ஆமாம்சாமி''களில் ஒருவரை அழைத்து, ''நீ அழுவது போல நடி; நான் பால் தருவது போல தருகிறேன். குடி''. எனப் பேரம் பேசியது: அதன் பின்னர், அந்த ''ஆமாம்சாமி'' பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவைச் சந்தித்து மனமிரங்கும்படி தனிப்பட்ட வேண்டுகோள் விடுத்ததாகவும் பிரதமர் உடன் அருள்பாலித்து தாம் விதித்த தடைகளை அகற்றினாரென்றும் மறுநாள் செய்தி வெளிவந்தது:

### ஆமாம்சாமி மேயர்

அரசாங்கத்தடை அகற்றப்பட்ட செய்தியைஅறிந்த 'ஆமாஞ்சாமி'யான யாழ்ப்பாண மேயரும் தாமும் சகல ஒத்துழைப்பும் தருவதாகப் புதியராகத்தில் பாடினார்: இதற்கிடையில் ஏற்கெனவே ஏற்பட்டுவிட்ட சீர்குலைவுகளைச் செப்பனிடுவதற்கு மாநாட்டு அமைப்பாளர்கள் மின்னல்வேகத்தில் இயங்கிக் கொண்டிருந்தனர். வெளிநாட்டு அறிஞர்களுக்குச் செய்திகள் பறந்தன. புதிய மண்டபங்களைத் தயார் செய்வதிலும் இரவு பகலாக ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அவற்றை அப்படியே விட்டுவிட்டு ஏற்கெனவே திட்டமிட்டிருந்த மண்டபங்களையும் அரங்குகளையும் தயார்செய்ய முற்பட்டனர். மானிடப் பண்பாடுகளைப் புறக்கணித்து மாநாட்டை இயன்றவரையில் சிதைத்துவிட்டு பின்னர் காலங்கடந்து ஒத்துழைப்பு வழங்க வந்த மேயரை மாநாட்டு அமைப்பாளர்கள் புறக்கணித்திருக்க வேண்டும் என்ற பொது மக்களின் கருத்து உணரக்கூடியதேயாயினும், வெளிநாட்டாரையும் வரவழைத்துவிட்டு வசதிகுறைந்த அரங்குகளில் மாநாட்டை நடாத்திகேலிக்கிடமாக்க கூடாது என மாநாட்டு அமைப்பாளர்கள் கருதியது சாலவும் சரியானதே.

அடிக்கடி சீர்குலைக்கப்பட்ட மாநாட்டு ஏற்பாடுகளை மீண்டும் மின்வெட்டு நேரத்தில் குறித்தபடி செப்பனிட்டு, ஜனவரி 3-ம் தேதி வியாழக்கிழமை காலை குறித்த நேரத்தில் குறித்தபடி மாநாடு விமரிசையாகத் தொடங்கக் கூடியதாக ஏற்பாடுகளைச் செய்த அமைப்பாளர்களையும், குறிப்பாக கண்துஞ்சாது உணர்ச்சியுடனும் உற்சாகத்துடனும் உழைத்த இளைஞர்களையும், எவ்வளவு பாராட்டினும் தகும்.

— வளரும்.

## யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்துசெல்வதைக் கண்ட அரசாங்கம் மாநாடு தொடங்குவதற்கு 3 நாட்களுக்கு முன்னர் விசா வழங்குவதற்கிருந்த தடையை நீக்கியது: உடனே யாழ்ப்பாண மேயர் ஆள் அனுப்பி, அமைப்புக் குழுச் செயலாளரை அழைத்து, மாநகரசபை ஒத்துழைக்குமென்றும், வரவேற்பளிக்குமென்றும், தாம் மாநாட்டுக் காலத்தில் தல யாத்திரை சென்று மாநாடு முடியும்போது வந்து, சனவரி ஒன்பதாம் நாள் பொருட்காட்சியைத் திறந்து வைக்கலாம் என்றும் கூறினார்.

தூரத்தே நின்ற அரசாங்க மேல் உத்தியோகத்தர்கள், நீதவான்கள், நீதியரசர்கள், எல்லோரும் பதிவுசெய்து ஒத்துழைக்க முன்வந்தனர். முன்பு கலை நிகழ்ச்சிகள் அளிக்க முன்வராத பல கலைஞர்கள் தங்களையும் கலைநிகழ்ச்சிகளிற் சேர்த்துக்கொள்ளும்படி மன்றாடினர். மாநாட்டினை எதிர்த்த சில எழுத்தாளர் சங்கத்தினர் தொடக்க விழா அழைப்புக் கேட்டு வந்தனர்.

இதற்குள், அரசாங்கத்தின் விருப்பத்திற்கு மாறாக யாழ்ப்பாணத்தில் நடத்துவதெனப் பிடிவாதமாக நின்றூற் பதவியிலிருந்து நீக்கிவிடுவார்கள், வித்தியாலங்காராவுக்கு மாற்றிவிடுவார்கள், சிறையில் அடைத்துவிடுவார்கள் என்று சிலர் பயமுறுத்தினர். பல்கலைக்கழகப் பேராசிரியர்களையும், விரிவுரையாளர்களையும் மாநாட்டிற்குப் போகாமல் தடைவிதிப்பதற்கும் சிலர் முயன்று பார்த்தனர். அவர்களுட் சிலரும் பின்பு மாநாட்டிலே தலைகாட்டினர்:

துணை நிற்க வேண்டியவர்கள் பலர் எதிர்த்தோ ஒதுங்கியோ நிற்க, ஆதரவும் ஒத்துழைப்பும நல்கவேண்டிய அரசு தடைகளை விதித்து வசதிகளை மறுத்து ஒடுக்க, கைகொடுத்துதவி ஊக்கமளிக்க முன்வந்தனர் பொதுமக்கள், நண்பகல் உணவையும் மக்கள் தமது செலவிலேயே அளித்தனர்: வெளிநாட்டுப் பிரதிநிதிகளைத் தங்கள் இல்லங்களிலே தங்க வைத்து, உபசரித்து, அவர்களுடன்கூட மாநாடு சென்று, அவர்கள் நலனையே கவனிப்பதிற் போட்டியிட்டனர். பல இளைஞர்கள் தொண்டர்களாகப் பதிவு செய்து கண்ணியமாகவும் கட்டுப்பாடாகவும் நடந்து எல்லோரின் மதிப்பையும் பெற்றனர்: முதலிலே இருட்டடிப்புச் செய்த பத்திரிகைகள் (சுதந்திரன் தவிர) மாநாட்டு நிகழ்ச்சிகள் பற்றிச் செய்திகள் வெளியிடத் தொடங்கின. சிறப்பு மலர் வெளியிட்டு ஒவ்வொரு நாளும் உயர்த்தி வைத்திருக்கவேண்டிய பத்திரிகைகளின் தர்மத்தை வெளிநாட்டறிஞரே உணர்ந்து கொண்டார்கள்.''

—வளரும்

## ஆனையிறவுத்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பறிக்கும்வேலையைத் தானும் மாற்று வழிகண்டு தடுத்தாட்கொள்ள இவர்களால் முடியவில்லையென்றுல் வெட்கம்; இவர்கள் வாய்வீரம் பேசுவதும்; வக்காலத்து வாங்குவதும்; வருகை தரும் மந்திரி மாருக்கு முந்திரிப் பருப்புப் போல முந்திக்கொண்டு மாலை போடுவதும்.

யாழ்ப்பாணத்தில் மா ''பிளாக்மார்க்கெட்டிலும்'' கிடைக்காது மக்கள் அவதியுறுவதற்குப் பரிகாரம்தேடி கூப்பனுக்கு மாவைக் கொடுக்க வகை செய்ய முடியாதவர்கள்; கிளிநொச்சியில் அரிசி ரூ 3/- விற்க யாழ்ப்பாணத்தில் ரூபா 5/- ஆக அதிகரித்திருப்பதைத் தடுக்க முடியாதவர்கள், மலையகத்தில் தமிழ் மக்கள் செத்துக்கொண்டிருக்கும் நிலைகண்டு வருந்தும் யாழ் தமிழ் மக்கள், அதே நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதையிட்டு ஏனோ தானோ என்று இருப்பவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கே ஆதரவு அதிகரித்து வருகின்றது என்று கனவு கண்டு தூக்க மயக்கத்தில் கொட்டாவி விடுபவர்கள் வெறும் மரக்கட்டைகள்; நெல்லுக்குள் இருக்கும் பதர்கள்.

## நன்றிகெட்ட தமிழர் நாங்கள்!

முருங்கன்—மகேசன்

வீறுகொண்ட தமிழனும் மானமுள்ள தமிழனும்
கூறுகின்ற தமிழரின் செய்கையில் வீறுஇல்லை
பாடும்கவி எம் அண்ணன் காசிஆனந்தனுக்கு
சூடுகண்ட சிங்களவர் முள்ளுமுடி சூட்டுகின்றூர்
பாடும்அந்த உணர்ச்சியங்கே படும்பாட்டை யாரறிவார்
தேடும்சுகம் தமிழர்நாமோ வீடுகட்டி வாழுகின்றோம்.

நாம்தமிழர் சொற்பந்தான் என்றாலும் மானமுண்டு
தமிழ்வாழ எண்ணமுண்டு மடிந்திடவும் திண்ணமுண்டு
என்றாலும் வீரமில்லை ஆனந்தை விடுவிக்க
கூறுகட்டிக் கொடிகட்டி குரல்கொடுத்துச் சென்றிட்டால்
சிறைக்கதவு என்செய்யும் பறையுங்கள் தோழர்களே

சிறையினுள்ளே மாவைஎன்று கூறுகின்றூர்
கோவை அண்ணர்
நிறைதமிழன் முத்தோடு மகேந்திரனும் சிறையினுள்ளே
தலைக்கோ எண்ணெயில்லை வயிற்றுக்கோ நிறைவுமில்லை
சிலைபோல வாழுகின்றூன், உயிரிருந்தும் வண்ணைமகன்
நிலைகண்டு கலங்காத தமிழர்நாம் தமிழர் தாமோ
இலையென்று விட்டுவிட நாமென்ன பேடிதாமோ

என்றெமக்கு விடிவுகாலம் அன்றேநாம் தமிழராவோம்
என்றெண்ணிச் சென்றவர்க்குச் சிறைக்கதவே வீடாகி
கன்றுபிரி பசுபோல வாழுகின்றூர் மனமுருகி
நன்றிகெட்ட தமிழர்நாம் உண்டுவிட்டு உறங்குகின்றோம்

மாண்டவர் மீளார்தான் சிறைசென்றூர் திரும்பாரா!
மாண்டபின்பும் பைந்தமிழில் பாடுஎன்பார் பழந்தமிழர்
உண்டபின்பும் ஏவறையில் தமிழ்இல்லை நம்மவர்க்கு!
கொண்டாட்ட மணவறையில் தமிழ்இல்லை எம்மிடத்தில்
திண்டாட்டப் பிணவறையில் தமிழோசை ஏனில்லை
கண்ணீர் உகுப்பாயா? களம்காண வகுப்பாயா?

# குமாரசூரியரின் துரோக 'தர்பார்' இன்னும் எத்தனை நாளைக்கு?

## வேலணை கருத்தரங்கில் பண்டிதர் வீரவுரை!

—வேலணை கிழக்கு அம்மன் கோவில் தெற்கு வீதியில் வேலணை இளந்தமிழர் முன்னேற்றக் கழகம் நடத்திய அரசியற் கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட காவலூர் பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் நிகழ்த்திய உரையின் சுருக்கம்:-

'இன்று தமிழினத்தின் உரிமைப் போராட்டத்தை நசுக்குதற்கு முயலும் ஆட்சியாளரின் தலைமைத் தரகர் அமைச்சர் குமாரசூரியரே யாவார். எனவே இதனாலே தான் நான் அவரைப் பாராளுமன்றத்திலும் வெளியிலும் சாடுகின்றேன்.

'நீங்கள் ஏன் என் கழுத்தை வெட்டுகிறீர்கள்' என்று அவர் என்னைச் சில பாராளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் கேட்டார். ஓரினத்தின் உரிமைபோராட்டத்தை நசுக்க முற்படும் கோடரிக் காம்புகளின் சுயரூபத்தை மக்கள் அறியச் செய்வது அவ்வினத்தின் உரிமைக்காக அஞ்சாதும் அசையாதும் போராடும் எங்களின் கடமையாகும்.

எங்களுக்குக் கால்பிடிக்கவோ, வால்பிடிக்கவோ ஆளுவோரை அண்டிப் பிழைக்கத் தெரியாது. உயிர் போனாலும் இந்த மானங்கெட்ட ஈனச்செயலை மானம் மரியாதை உள்ளவர்கள் நீதியை—நியாயத்தை—பிறப்புரிமையை மதிப்பவர்கள் செய்யமாட்டார்கள். கேவலம் அமைச்சர் பதவிக்காகவும் பிறசலுகைகளுக்காகவும் இனத்தைக்காட்டிக்கொடுப்பவர்கள் — உரிமைகளை விற்றுப் பிழைப்பவர்களை எட்டப்பர்களாகவே சமுதாயம் தூற்றிப் பழித்து வருகின்றது.

அமைச்சரவையில் உள்ள திரு. பதியுதீன் மகுமூத் அவர்கள் தம் இனத்துக்கு அளப்பரிய நன்மைகளைத் துணிந்து செய்துவருகிறார். முஸ்லிம் மக்கள் சிலை நாட்டிப் போற்றத் தக்க முறையில் அவர் அந்த இன மக்களை ஒற்றுமைப் படுத்தி ஒப்பற்ற தொண்டாற்றி வருகிறார். அவர் முஸ்லிம் மக்களிடையே சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் போலிக்கிளைகளை நிறுவவில்லை; சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களை நியமிக்கவில்லை. இனத்தின் ஒற்றுமை கருதி அவர் இஸ்லாமிய சோசலிச முன்னணியை நிறுவியிருக்கிறார். இந்த முன்னணி நன்கு இயங்கவில்லை எனப் 'புயல்' துக்கப்படுகிறது.

அமைச்சர் குமாரசூரியரோ சுதந்திரக் கட்சியின் போலிக்கிளைகளைத் தமிழ்ப் பகுதிகளில் காளான்கள் போல முளைக்கச்செய்து ஒரு கூலிப் படையைச் சிருட்டித்திருக்கிறார். கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்பார்கள். அமைச்சர் குமார



சூரியரின் 'தர்பார்' இன்னும் எத்தனை நாள் நடக்கும்? அவரை அண்டிப் பிழைக்கலாம் என்று நினைத்து மூலைக்கு மூலை— சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் கிளை நிறுவுபவர்களின் ஆட்டமும் இன்னும் எத்தனை நாளைக்கு நடக்கும்? அடுத்த தேர்தலின் பின் இவர்களில் பலர் மக்கள் முகத்தில் விழிக்க வெட்கப்பட்டுப் பதுங்குவார்கள்.

நீலக்கொடி ஏந்தும் இந்த அரசியல் பச்சோந்திகளில் சிலர் பச்சைக்கொடி ஏந்துவதையும் நாங்கள் காணலாம். ஏன்? இப்பொழுதே ஐ. தே. க. கிளைகளைத் தொடக்குதற்கும் சிலர் ஓடி ஆடித் திரிகிறார்கள்.

சிங்களப் பகுதிகளில் புதிதாகச் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளைகள் பல தொடங்கப்படுவதாகவோ தமிழ்ப் பகுதிகளில் சமசமாசக் கட்சிக்கிளைகள் — கொம்யூனிசக் கட்சிக்கிளைகள் தொடங்கப்படுவதாகவோ செய்திகள் வருகின்றனவா? இல்லையே; ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் ஒவ்வொரு தொகுதியிலும் 28வது கிளை 30வது கிளை என்று கணக்குக் காட்டிச் சுதந்திரக் கட்சிக் கிளை தோன்றுவதன் மர்மம் என்ன? அமைச்சர் குமாரசூரியரின் அரசியல் செல்வாக்கு ஆட்டம் கொடாமல் இருப்பதற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள சில சுயநலவாதிகள் இனத்தை—மொழியை விற்று அற்ப சலுகை பெறுதற்குமே இந்தக் கிளைகள் காளான்கள் போல முளைக்கின்றன.

இன்றுள்ள சிங்கள அரசாங்கம் — திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் — பெரும்பான்மையினரான தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் பிரதிநிதிகளுடன் பேசித் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வராமல் இருப்பதற்குத் தடைக்கல் இந்த அமைச்சர் குமாரசூரியரும் அவருக்குப் பந்தம் பிடிக்கும் பச்சோந்திகளுமே! எனவே இப்பொழுது தமிழினத்துக்கு அரசியல் துறையில் துரோகம் செய்கின்றவர்களின் பட்டியலில் தலைமையிடம் அமைச்சர் குமாரசூரியருக்கே உரியது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் போலிக்கிளைகள் மக்களை ஏமாற்றுவதையும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு எதிராகப் பொய்ப்பிரசாரஞ் செய்வதையும் பிரதம அமைச்சரின் படத்துடன் நீலமையால் அச்சிடப்பட்ட கடிதத்தாள்களைக் காட்டி உத்தியோகத்தர்களை வெருட்ட முயல்வதையும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு எதிராக பெட்டிசம் அனுப்புவதையுமே தொழிலாகக் கொண்டிருக்கின்றன.

அமைச்சர் குமாரசூரியரைப் பிடித்து நாங்கள் எல்லாம் செய்து தருவோம் என்று கூறிப்பிழைக்கின்றவர்களின் தொகை நாளுக்கு நாள் பெருகுகின்றது; இன்றுவரை இவர்களோ அமைச்சரோ தமிழ்ப் பகுதி மக்களின் பொதுத்தேவைகளை நிறைவேற்றினாரா?

---

# ஆனையிறவுத் தடை முகாமில்

## ஆண்ட தமிழினம் இன்று படும்பாடு!

ஆனையிறவு தடைமுகாமில் லொறிகளில் சாமான்கள் கொண்டுவருவோர் படும் பாட்டை பலர் சொல்லக் கேட்டு அதனை நேரில் பார்த்துச் சந்தேகத்தைத்தீர்த்துக் கொள்ளச் சமீபத்தில்யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிவரை சென்று வந்தேன்.

சில வாரங்களுக்கு முன்னர் இந்நாட்டுத் தினசரிகள் முன்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டன. அச்செய்தி ஒவ்வொரு பத்திரிகையிலும் வெவ்வேறு வடிவத்தில் தெரிவிக்கப்பட்டது. ஒரு பத்திரிகை ''ஆனையிறவு தடை முகாம் நீக்கப்பட்டது'' என எட்டுக்கலத் தலைப்பிட்டது. இன்னொரு பத்திரிகை ''தமிழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை வெற்றி கண்டது; தடை நீக்கம்'' என்றது. யாழ்ப்பாண மக்களுக்கு இச்செய்தி அப்போது பால் வார்த்த செய்தியாக இருந்தது. இச்செய்தியில் இன்னொரு சிறப்பு மிகுந்தது:

தபாலமைச்சர் திரு. குமாரசூரியர் பிரதமரின் கோரிக்கையின் படி தடை நீக்கப்பட்டது என்று கூறியது ஒரு பத்திரிகை. இன்னொரு பத்திரிகையோ யாழ் அரசியல் அதிகாரி திரு. அருளம்பலம் பேசியதால் தடை முகாம் நீக்கப்பட்டது என்றது. வேறோர் பத்திரிகையோ யாழ் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. துரையப்பாவின் வேண்டுதலில் இத்தடை நீக்க ஏற்பட்டது என்று விளாசியது.

பத்திரிகைகள் பந்தி பந்தியாக எழுதியதைக் கண்டு உடுவில் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் இது பற்றி பாராளுமன்றத்தில் இது உண்மைதானா என்று கேட்டார். அதற்குச் சரியாகப் பதிலளிப்பார் எவரும் கிடைக்கவில்லை. பிரதமரைப் பார்த்துப் பேசினேன், சமத் தொழில் மந்திரியைக் கண்டு பேசினேன் எல்லாம் வெற்றி, எல்லாம் வெற்றி என்று தலைகால் புரியாது எக்களிப்பால் பற்பல அறிக்கைகளை வெளியிட்டனர். இவற்றை யெல்லாம் பொறுமையுடன் படித்துப் பலரிடம் இதில் உண்மையேதும் இருக்கிறதா என்று வினவினேன். அவர்கள் பேச்சு வார்த்தை விழலுக்கிறைத்த சாக்கடை நீராகிடதைக் கண்டு மெல்லச்சிரித்தேன். இத்தகைய தடை நீக்க புலிவேட்டைக்காரரெல்லாம் இன்று புதரில் மறைந்ததேனோ?

சமீபத்தில் தமிழ் மக்களின் மலையகத் தமிழரின் ஜென்ம விரோதி, விஷ வார்த்தைகளைக் கக்கும் கொப்பேகெடுவா யாழ் வந்தார்.

**ந. சிவபாதம்**

ஆனையிறவுத் தடை நீக்கம் பற்றி அவர் கட்சி ஆதரவாளர்களே வேண்டுகோள் விடுத்தனர். ஒன்றும் நடக்கவில்லை. இந்த நல்ல நேரம் பார்த்து நானும் பலரும் பலதும் பத்தும் சொல்லக் கேட்டு ஆனையிறவு தடை முகாம் சென்றேன். அங்கு எம் மக்கள் படும்பாடுஎன்னை படாதபாடு படுத்தியது.

ஆனையிறவுத் தடை முகாமுக்கு வரும் வாகனங்கள் அத்தனையும் அங்கு துருவித் துருவிச் சோதிக்கப்படுகின்றது. பல நூறு ரூபா செலவிட்டு பக்குவமாகக் கட்டி வரும் வைக்கோல் அத்தனையும் அங்கு மீண்டும் பறிக்கப்படுகின்றது. விறகு லொறிகளிலுள்ள விறகுகள் இறக்கப்படுகின்றன. மண் தேங்காய் லொறிகளிலுள்ள அனைத்தும் மீண்டும் ஆனையிறவு மண்ணில் குவிக்கப்படுகின்றன. எங்கும் வைக்கோல் போராகவும், மண் குவியலாகவும், விறகுக் கட்டைகளாகவும் இருக்கின்றன. பூரண பரிசோதனையின் பின் மீண்டும் அவை லொறிகளில் ஏற்றப்படுகின்றன. இவற்றைக் கொள்வனவு செய்யும் இடங்களில் ஏற்றுக்கூலி மட்டும் கொடுத்தோர், இப்போது ஆனையிறவில் மீண்டும் இறக்கும் கூலி, ஏற்றும் கூலி கொடுக்க வேண்டியுள்ளது. இதனால் லொறிக் கூலி, அதில் வரும் சாமான்களின் விலை என்பன அதிகரித்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் வைக்கோல், தேங்காய் அதிக விலைக்கு விற்கப்படுவதற்கும் இதுவும் ஒரு முக்கிய காரணமாகும். பட்டகாலிலே படும் என்பார்கள். யாழ்ப்பாண மக்கள் இன்று விலையேற்றத்தால் படும் கஷ்டத்தை மேலும் கஷ்டமாக்குகின்றது இத்தடை முகாம். பதைபதைக்கும் வெயில் இப்போ யாழ்ப்பாணத்தில். இந்த வெயிலிலும், தண்ணீர் தாகத்திலும், வியர்வையிலும் வயிற்றுப் பிழைப்புக்காகப் பொருட்களைக் கொண்டு வருவோர் துயர் ஆனையிறவுத்தடை முகாமில் மேலும் அதிகரிக்கின்றது; இதற்கோர் மாற்று வழி கண்டாக வேண்டும் எனப் பலர் என்னிடம் தெரிவித்தனர்.

ஆளும் கட்சி ஆதரவாளர்கள் அவர்களின் யாழ்ப்பாணத்து தரகர்மார் இந்த நிலை தெரியாமல் இருக்கவில்லை. ஆனால் அவர்களால் இன்று எதுவும் செய்ய முடியாது கையாலாகாதவர்களாக இருக்கிறார்கள். ஆனையிறவுத் தடை முகாமைத் தான் எடுக்க முடியவில்லை'. இப்படி சுண்டங்காய் காப்பணம் சுமை கூலி முக்காப்பணமான ஆனையிறவுத் தடை முகாமில் ஏற்றிப்

(6-ம் பக்கம் பார்க்க)

---

# 'இதோ, ஒரு நாடகம்'

## அறிமுக விழா!

''நகைச்சுவை நாடகங்களுக்குத்தான் மக்களிடையே மிகுந்த வரவேற்பு இருக்கிறது. இதனைப் பயன்படுத்திச் சில நாடக மன்றங்கள் புளித்துப்போன பகிடிகளை வைத்து எதையெதையோ பேசி மக்களை ஏமாற்ற முனைகிறார்கள். இந்த நிலையில் திரு. பொ. சண்முகநாதன் நல்லதொரு நகைச்சுவை நாடகத்தை— அதுவும் திடீர் நாடகமன்றங்களின் திடீர்த் தயாரிப்பு முயற்சிகளையே கேலிசெய்து 'இதோ, ஒரு நாடகம்' எழுதியிருப்பது பாராட்டத்தக்கதும் புது முயற்சியுமாகும்.''

இவ்வாறு திரு. பொ. சண்முகநாதனின் 'இதோ, ஒரு நாடகம்' அறிமுக விழாவின் போது 'அறிமுக உரை நிகழ்த்திய திரு. ஏ ரி. பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

இவ்விழா யாழ் இலக்கிய வட்டத்தினால் யாழ் பொது நூல் நிலையக் கேட்போர் கூடத்தில் நடாத்தப் பெற்றது.

விழாவுக்குத் தலைமை வகித்த இலக்கிய வட்டத் தலைவர் கவிஞர் வி. கந்தவனம் தமது தலைமையுரையில் 'நகைச் சுவையாக எழுதும் ஆற்றல் எல்லாருக்கும் எளிதில் வாய்த்து விடுவதில்லை' என்றும் 'விரல்விட்டு எண்ணக்கூடிய வெகு சிலர் தாம் இத்துறையில் சிறந்து விளங்குகிறார்கள்' என்றும் அத்தகையவர்களில் திரு. சண்முகநாதன் குறிப்பிடத்தக்கவர்' என்றும் கூறினார்.

'சண்முகநாதனுக்கு நாடகம் எழுதும் ஆற்றல் நிரம்ப இருக்கிறது என்பது இந்த நாடகத்தைப் படித்ததும் தெரிந்து விட்டது' என்ற திரு. ஆ சிவநேசச்செல்வன் தொடர்ந்து தமது ஆய்வுரையில் நாடகத்தின் கருப்பொருளாக தொழிலாளர் போராட்டம் வறுமை போன்ற சமுதாயப் பிரச்சினைகளை வைத்திருக்கலாம் என்றும் 'அடுத்த நாடகத்திலாவது அவர் இதைச் செய்யலாம்' என்றும் சொன்னார்.

இதையடுத்து ஆய்வுரை நிகழ்த்திய இரசிகமணி கனக செந்திநாதன் அவர்கள் திரு. சிவநேசச் செல்வனின் சில கருத்துக்களை மறுத்துப் பேசினார். அப்போது அவர், 'இன்று நாட்டிலும் சரி வீட்டிலும் சரி சதா வறுமையும் இல்லாமையும் மக்களை வாட்டி வதைக்கிறது. எங்கு பார்த்தாலும் இதே ஓலம் தான் இந்த நிலையில் இவைகளைச் சற்று மறந்து ஆறுதலும் அமைதியும் பெற இலக்கியங்கள் — அதுவும் நகைச்சுவை இலக்கியங்களில் மீண்டும் வறுமையும் இல்லாமையும் அழுகையும் கண்ணீரும் என்றால் அவைகளை மக்களால் எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்?' எனக் கேட்டார்.


நாடக ஆசிரியர் திரு. பொ. சண்முகநாதன் தமது பதிலுரையின் போது 'நாடகம் படிப்பதற்காகவும் படைக்கப்படலாம்' என்ற கருத்தினை வலியுறுத்திப்பேசினார். அப்போது அவர் 'சில கருத்துக்களைக் கட்டுரை வடிவிலேதான் அழகாகச் சொல்லமுடியும் என்பது போல—சில கருத்துக்களைக் கதைகள் மூலம்தான் அழகாகச் சொல்ல முடியும் என்பது போல் வேறு சில கருத்துக்களை நாடகம் மூலமாகத்தான் அழகாகச் சொல்ல முடியும்—வேறு முறையில் சொல்ல முடியாது' என்பதை விளக்கி விட்டு 'நாடகம் நடிப்பதற்கு மட்டுமே எனச் சொல்பவர்கள் கற்பனையின் ஒருவகை வெளிப்பாட்டைப் புறக்கணிக்கிறார்கள்' என்றுங் குறிப்பிட்டார்.

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது


5-வது வாரம் கிங்ஸ்லி-பிளாசா லிடோ (யாழ் நகர்)

முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன், சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார், ஸ்ரீலேகா, M. R. R. வாசு, நடித்தது.

# சூரியகாந்தி



கெப்பிட்டல் சிவாஜி, சாவித்திரி நடித்த— சரஸ்வதி சபதம் (கலர்)

6-வது வாரம்

# கெயிட்டி

# ஜக்கம்மா

தமிழில் வெளிவரும் முதல் கௌபோய் திரை விருந்து



ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா

எமது புத்தாண்டுப் பெருவிருந்து

செல்லமகால் மற்றும் திரைகளில்

அர்ஜுனாவின்

# கலியுககாலம்

வெகு விரைவில்

எம். ஜி. ஆர்.
— நடித்த —

# அன்னமிட்டகை

பொன்னான வாய்ப்பு

சென்ரல் -(மருதானை) 2,6,9 30

காலம் கடத்தாமல் இன்றே பாருங்கள்!

சிறந்த கதை கருத்துள்ள வசனம்
இனிய பாடல்கள் சிறந்த நடிப்பைக் கொண்ட படம்.

சிவாஜி கணேசன் — சரோஜாதேவி
எம். ஆர். ராதா, ரங்கராவ், முத்துலெட்சுமி
முதலியோர் நடித்த-

# இருவர் உள்ளம்


## கலைவிழா வல்ல! தமிழ்விழா!!

தமிழரால் வாழ்ந்துகொண்டிருக்கும் சிலர்க்கு தமிழ் ஓர் ஆய்வுப்பொருள்; எண்ணப்போக்கை எடுத்துக் காட்ட உதவும் ஒரு கருவி; அவ்வளவேதான்! அசல் தமிழர்க்கு அதுவேதான் இதயகீதம், இன்னுயிர். இன்று தமிழ்க் கலைகள் மட்டுமா புதையுண்ட பொன்னை மிதியுண்டு கிடக்கிறது? அரசியல், பொருளியல், சமுகம், பிரதேசம் கல்வி போன்றவற்றின் அடிப்படையிலும் அடிப்படை உரிமைகளும் பறிக்கப்படுகிறது; மறுக்கப்படுகிறது.

இந்நிலையில், தேவை உணர்ந்து, வேளை அறிந்து, தமிழன்னையின் விருப்பு தெரிந்து நடந்த ஞாயிறு விழா எடுத்திருக்கிறார்கள் மருதானை தொழில் நுட்பக் கல்லூரியினர். முத்தமிழ் விழா என முன்றலில் எழுதிய அவர்கள் கலைவிழா என்றபேரில் முத்தான தமிழ்க்கு சத்தான தமிழ் விழா எடுத்துள்ளார்கள்

தமிழ் அறிவோடு உணர்வும் உள்ளவர்க்கே முதன்மை தந்திருந்தார்கள். பெரும்பாலும் இளங்கண்டே பாவிசைக்கவும் நாவசைக்கவும் இடம் கொடுத்திருந்தார்கள். தளர்ந்த தமிழரைத் தட்டிக்கொடுத்தார்கள். தவறிழைக்கும் கயவரைத் தட்டிக்கேட்டார்கள்; தியாகிகளை ஏற்றினார்கள்; துரோகிகளைத் தூற்றினார்கள்; விவாதம் சுமார் கருத்தரங்கத்தில் (கடலில்) இல்லாத ஆர்ப்பரிப்பு அரங்கில் (இராமகிருஷ்ண மிசனில்) அமைந்த கருத்தரங்கத்தில் இருந்தது. கவியரங்கம் சுவை கூட்டியது. கேட்டவர் நாளங்களிற் சூடும் ஏற்றியது நாடகம்...?...ஆபாசம் இல்லாதது. இறுதி நிகழ்ச்சி—கதாகாலட்சேபம் விழாவிற்கே மணிமகுடமாக அமைந்தது: அது — உலகத் தமிழ் விழவும் முடிவில் நடந்த இழவும் பற்றியது. அதன் மேன்மைக்கு—மேதாவிலாசத்திற்கு ஒரு வார்த்தை—அது மீண்டும் மீண்டும் மேடைகள் காணவேண்டியது.

—கனக மனோகரன்

இப்பத்திரிகை இவோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் ஏப்ரல் மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது